Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12149)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-05 | 21-07-2005 | வியாழக்கிழமை | ஓசை-153

-- நிழல் யுத்தம் திணிக்கப்பட்டிருக்கையில் இருதரப்பு சந்திப்பு சாத்தியமில்லை--

# யுத்த நிறுத்தத்தை அரசு சீராக கடைப்பிடிப்பதன் மூலமே

# இருதரப்பு நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பலாம்

## சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வே தரப்பிடம் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

*யுத்தநிறுத்த உடன்படிக்கையை அரசாங்கம் ஒழுங்காக அமுல்படுத்துவதனூடாகத்தான் இருதரப்பு நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பலாம். எம்மீதும், எங்கள் மக்கள் மீதும் ஒரு நிழல்யுத்தத்தை திணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் இருதரப்புக்குமிடையில் நேரடிச் சந்திப்புக்களை ஒழுங்கமைப்பது என்பது சாத்தியமில்லாத ஒரு விடயம் என்பதை நோர்வே தரப்பிடம் தெளிவாக வலியுறுத் தியிருக்கிறோம். இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.*

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மற்றும் நோர்வே தரப் பினர் ஆகியோரை கிளிநொச்சி சமா தானச் செயலகத்தில் சந்தித்து இரண்டு மணி நேரம் பேச்சு நடத்திய பின்னர் பத்திரிகையாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில;

***இன்றைய சந்திப்புப்பற்றி?***

தற்பொழுது மோசமடைந்துவரும் நெருக்கடி நிலைபற்றியும், தற் பொழுது ஏற்பட்டு வருகின்ற குழப் பகரமான நிலைபற்றியும், விவாதிக் கும் முகமாகத்தான் இன்றைய சந் திப்பு இடம்பெற்றது. இதில் எங்கள் தலைமைப்பீடத்தின நிலைப்பாடு

(12ஆம்பக்கம் பார்க்க)



## புலிகளுடனான சந்திப்புக் குறித்து நோர்வே அதிகாரிகள் மௌனம்

(அலுவலக செய்தியாளர்)

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து இருமணிநேரம் பேச்சுநடத்திய கண்காணிப்புக்குழுத் தலைவர் மற்றும் நோர்வேத் தூதரக அதிகாரிகள் எவரும் பேச்சுக்கள் தொடர்பான எந்தத் தகவலையும் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கவில்லை.

கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இப்பேச்சுக்கள் நண்பகல் 12.00

(12ஆம்பக்கம் பார்க்க)

## ஹொக்லண்ட்- தனபால மாலை சந்திப்பு புலிகளின் நிலைப்பாடு எடுத்துரைப்பு

(கொழும்பு)

போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் சிறி லங்கா சமாதானச் செயலகப்பணிப் பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்து கிளிநொச்சியில் நேற்றையதினம் விடு தலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர் பாகவும், விடுதலைப்புலிகள் நிலைப் பாடுகள் குறித்தும் எடுத்துக் கூறி யுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்றுக்காலை விடு தலைப்புலிகளின் பிரதிநிதிகளுடான சந்திப்பை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய ஹொக்லண்ட் நேற்றைய

(12ஆம்பக்கம் பார்க்க)

## சனாதிபதித்தேர்தலை இவ்வாண்டில் நடாத்த உலக சனநாயகவாதிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

சிறிலங்காவில் சனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடத்தப்பட வேண்டுமென உலக சனநாயகவாதி களின் சங்கம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹவாட் தலைமையிலான இந்தச் சங்கம் நேற்றுமுன்தினம் நியூயோர்க் கில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் வலியுறுத்தப் பட்டுள்ளது.

அரசாங்கம் இந்த வருடம் நடத்தப் படவேண்டிய சனாதிபதித்தேர்தலை ஒத்திவைக்க முயற்சிப்பது தொடர் பாக உலக சனநாயகவாதிகளின் சங்கம் தமது கவனத்தைச் செலுத் தியுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய தேசியக கட்சி மற்றும் சனநாயக அமைப்புகள் என்பன இந்த வருடத்தில் சனாதிபதித் தேர்தலை நடத்தி நாட்டின் இறை மையைத்பாதுகாக்க எடுக்கும் முயற்சி

(12ஆம்பக்கம் பார்க்க)

## வேம்படிச்சந்தியில் புதிய காவலரண்!

(நல்லூர்)

யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் இராணுவத்தினர் புதிய காவலர ணொன்றை நிர்மாணித்துள்ளனர் இந் நடவடிக்கையானது யுத்தநிறுத்த மீறலாகுமென பொதுமக்கள் கூறு கின்றார்கள். போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவினர் சென்றுவரும் வீதியில் பகிரங்கமாக நிர்மாணிக்கப்

(12ஆம்பக்கம் பார்க்க)

## கல்முனையில் கிராம அலுவலர் நேற்றிரவு சுட்டுக்கொலை!

(கொழும்பு)

அம்பாறை கல்முனையில் கிராம அலுவலர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றிரவு 8.30 மணியளவில் நடைபெற்ற இந்தச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர் மாரிமுத்து பாஸ்கரன் (வயது54) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகை யில், சுனாமி நிவாரண

(12ஆம்பக்கம் பார்க்க)

## ஏ-9 வீதியில் விபத்து மூவர் படுகாயம்!

வீதிப்போக்குவரத்து நடைமுறைகளை மீறி மூவர் பயணித்த உந்துருளி விபத்துக்குள் ளாகியதில் அதில் பயணித்த மூவரும் காய மடைந்துள்ளனர். மேற்படி விபத்துச்சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி டிப்போ வீதியில் அமைந்துள்ள றீடோ நிறுவனத்துக்கு

(12ஆம்பக்கம் பார்க்க)

## புலிகளின் நிர்ப்பந்தத்தையடுத்து அரசன்குளம் புதியசோதனை நிலையம் படையினரால் அகற்றல்

(வவுனியா செய்தியாளர்)

ஏ-9 வீதியில் ஓமந்தை அரசன்-குளத்தில் நேற்று முன்தினம் படையினரால் அமைக் கப்பட்ட புதிய சோதனை நிலையத்தை உட னடியாக அகற்ற வேண்டும் என வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் விடுத்த கோரிக்கையை அடுத்து அச்சோதனை நிலையம் நேற்று முன்தினமிரவே படையின ரால் இரவோடு இரவாக அகற்றப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் ஓமந்தை இராணுவ சோதனை நிலையத்தில் இருந்து வவுனியா நோக்கி இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அரசன் குளத்தில் சிறிலங்காப்படையினர் நேற்றுமுன் தினம் புதிய சோதனை நிலையம் ஒன்றை அமைத்து ஏ-9 வீதி ஊடாகச் செல்லும் வாக னங்களை வழிமறித்து சோதனை இட்டதுடன் பயணிகள் மீதும் கெடுபிடிகளை மேற்கொண்டி ருந்தமை தெரிந்ததே. படையினர் மேற்கொண் டுள்ள கெடுபிடிகள் குறித்தும் அதனை உடன டியாக அகற்ற வேண்டும் என்றும் வவுனியா

(12ஆம்பக்கம் பார்க்க)

## 203 பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் 203 பேர் நிரந்தர நியமனங்கள் பெறவுள்ளனர். இவர்களின் தகைமைகளைப் பரிசீலிப்பதற்காக மாகாணக்கல்வி அமைச்சுக்கு ஜூலை 25,26 ஆம் திகதி சமூகமளிக்கும்படி இவர் களுக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கத்தினால் கடிதங்கள் அனுப் பிவைக்கப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட் சிப்பத்திரம், கா.பொ.த உயர்தரப் பரீட்சை சான் றிதழ், க.பொ.த சாதாரண பரீட்சை சான்றிதழ், பிரதேச செயலாளர், சமாதான நீதவான், கல்வி கற்றபாடசாலை அதிபரின் சான்றிதழ்கள் ஆகிய வற்றின் மூலங்களையும் அவற்றின் பிரதிகளை யும் அப்போது கொண்டு வரவேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்.

(12ஆம்பக்கம் பார்க்க)

## திருமலை சம்பவங்கள் தொடர்பாக அரசு உறுதிமொழிகள் எதனையும் நிறைவேற்றவில்லை

### -பாராளுமன்றில் இரா.சம்பந்தன்

திருகோணமலை சம்பவங்கள் தொடர் பாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உறுதி மொழிகள் எதுவும் அரசினால் நிறைவேற்றப்பட வில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வின்பொழுது இந்தக்கருத்தை வெளியிட்ட அவர், திருகோண மலையில் உள்ள மேலதிகத் துருப்பினர் படிப் படியாக வாபஸ் பெறப்பட வேண்டும். இதன் மூலமே திருகோணமலையில் சுமுகமான

(12ஆம்பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**விற்பனைக்குண்டு**

வலது குறைந்தோருக்கான முச்சக்கர மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பதிவு செய்யப்படாதது நா. இரத்தினராசா. அளம்பில் மோட்டார் கியர் நீயு மொடல் சாளி நிறம் சிவப்பு (6190)

**தவறிவிட்டது.**

17.07.2005 அன்று இரவு கனகபுரம் பாடசாலைச் சந்திக்கும் கிளிநொச்சி A-9 சாலை அறிவமுது பொத்தகசாலைக்கும் இடையில் கறுப்புநிற நூல் கயிறு கட்டப்பட்ட **Dvrx Player and voice Recorder** (ஒலிப்பதிவுச் சாதனம்) தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது பசுந்தீவு அரைக்கும் ஆலை, இரத்தினபுரம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6374)

**தவறிவிட்டது.**

நித்தியானந்தராசா- ஜெகசுதா என்பவருடைய தேசிய அடையாள அட்டை 12.07.2005 அன்று கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடிக்கும் கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது திருநகர், இல-34, வண்றோட் கிளிநொச்சி என்னும் முகவரிக்கு ஒப்படைக்கவும் (6372)

**தவறிவிட்டது.**

4ஆம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த வேலாயுதப்பிள்ளை சந்திரகுமார் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் தே.அ.அட்டை நிரந்தர பயணஅட்டை என்பன அடங்கிய பேஸ தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முல்லைத்தீவு பிரதேச சபையில் ஒப்படைக்கவும். (6192)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகாவித்தியாலய பழையமாணவர் சங்கப்பொதுக்கூட்டம் அதிபர் செ.அல்பிரட் தலைமையில் நடை பெறவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் தற்போது முல்லைத்தீவு மகாவித்தியாலயம் இயங்கும் பிரதான மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறும்.

இதில் சகல பழைய மாணவர்களையும், நலன் விரும்பிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வித்தியாலய அதிபர் கேட்டுக்கொள்கின்றார்.

## துயர் பகிர்கின்றோம்

### திரு. நடராசா

கிளி. மாவட்ட வைத்தியசாலையில் கடமைபுரியும் தாதிய உத்தியோகத்தரான திரு.ந.பற்குணராஜா என்பவரின் தந்தையார் திரு. நடராசா 18.07.2005 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**மாவட்ட வைத்திய அதிகாரி,**
**வைத்திய அதிகாரிகள்,**
**உத்தியோகத்தர்கள்,**
**ஊழியர்கள்.** (சி-12346)

## மாகாண நிலைப்போட்டிக்குத் தெரிவான கிளிநொச்சி ம.வி. மாணவர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியில் பங்குபற்றி மாகாண நிலைப் போட்டிக்குத் தெரிவான கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

இந்நிகழ்வானது நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் கிளி/மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் பள்ளிமுதல்வர் வ.யோகநாதன் தலமையில் நடைபெற்றது.

இதற்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை வைத்திய கலாநிதி அன்ரன் டேமியன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்த தோடு, சாதனைவீரர்களுக்கான சான்றிதழ்களையும், பரிசினையும் வழங்கிக் கௌரவித்தார்.

தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டியில் பங்கு கொண்டு மாவட்ட நிலையில் வெற்றிபெற்ற மாகாண நிலைக்குத் தெரிவான 55 மாணவர்கள் கௌரவிக் கப்பட்டனர். (கு)



## கண்ணீர் அஞ்சலி



சரவணமுத்து-சிவஞானசுந்தரம்

எமது சங்கத்தின் தலைவர் இ. திருக்கேதீஸ்வரன் அவர்களின் தந்தையாரான சரவணமுத்து - சிவஞானசுந்தரம் என்பவரின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட நிர்மாணிகள் சங்கம்,
கிளிநொச்சி. (சி-12375)

## கலைப் பெருவிழா

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பிரதேச செயலகம் நடாத்தும் இலக்கிய கலைப் பெருவிழா இன்று காலை 10.00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைவுபெறவுள்ளது.

வவுனியா பிரதேச செயலர் செல்வி. சுகந்தி துரைச்சாமி தலைமையில் நடைபெறவுள்ள இவ் இலக்கிய கலைப்பெருவிழாவில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகமும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலை, வவுனியா மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் குகன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சதாசிவம் கனகரட்ணம், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் "வசந்த நிலா" நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது.

## முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் உலருணவுப் பொருட்கள் வவுனியாவிலிருந்து பாரவூர்திகள் மூலமாகக் கொண்டு வருவதற்கான கூறுவிலை கோருதல்

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு 2005 ஏப்ரல் தொடக்கம் 2005 டிசெம்பர் மாதம் வரை சீனி, பருப்பு, மாவு, அரிசி ஆகியவற்றை வவுனியாவிலிருந்து கொண்டுவந்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ப.நோ.கூ. சங்கங்களிலும், முல்லைத்தீவிலுள்ள அரச களஞ்சியத்திலும் ஒப்படைப்பதற்காக வன்னி மாவட்டத்தில் இயங்குகின்ற அங்கீகரிக்கப்பட்ட ப.நோ.கூ. சங்கங்கள் பாரவூர்தி சங்கங்களிடமிருந்து முல்லைத்தீவு மாவட்ட கேள்விச்சபைத்தலைவரினால் பொறிக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைகள் பத்தாயிரம் (10000 கி.கிராம்) கிலோக்கிராமுக்கு ஒரு கிலோமீற்றருக்கு என்ற அடிப்படையில் குறிப்பிடப்பட வேண்டும்.**

விநியோகிக்கப்பட வேண்டிய இடங்களும். அவற்றிற்கான தூரங்களும்.

| | | |
|---|---|---|
| கரைதுறைபற்று ப.நோ.கூ.சங்கம் | முள்ளியவளை | 89 கி.மீ |
| புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் | புதுக்குடியிருப்பு | 112 கி.மீ |
| விசுவமடு ப.நோ.கூ.சங்கம் | விசுவமடு | 101 கி.மீ |
| முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.சங்கம் | ஒட்டுசுட்டான் | 72 கி.மீ |
| வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கம் | கரிப்பட்ட முறிப்பு | 57 கி.மீ |
| பனங்காமம்பற்று ப.நோ.கூ.சங்கம் | வவுனிக்குளம் | 67 கி.மீ |
| துணுக்காய்ப்பகுதி ப.நோ.கூ.சங்கம் | துணுக்காய் | 71 கி.மீ |
| முல்லைத்தீவு அரச களஞ்சியம் | முலலைத்தீவு | 96 கி.மீ |

01. முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 ஐ செலுத்தி 2005.07.20 ஆம் திகதி தொடக்கம் 2005.07.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் கூறுவிலைப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

02.

03. வரையறைகள்
   அ. தொடரணி உத்தியோகத்தர் கேட்கும் போது தேவையான பாரவூர்திகள் விடுவிக்கப்பட வேண்டும்.
   ஆ. ஒரு லோட்டிற்கு (10.000 கி.கிராம்) இருபத்தைந்து (25 கி.கிராம்) கிலோகிராமிற்கு மேலதிகமாகச் சோர்வு ஏற்படுமிடத்து அச்சோர்வுக்கான பெறுமதி அந்தப் பாரவூர்திக்கான கூலியிலிருந்து அறவிடப்படும்.
   இ. பாதுகாப்பான முறையில் குறிப்பிடப்பட்ட இடங்களில் பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.
   ஈ. பொருட்கள் ஒப்படைக்கப்பட்டமைக்கான உறுதிப்பத்திரம் கூலி பெற்றுக் கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

04. கொடுப்பனவுகள்
   ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் சரியானது என்பதனை நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். அவ்வாறான புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திற்கு கிடைத்த திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலைமூலம் கொடுப்பனவு செய்யப்படும்.

05. பூரணப்படுத்திய இரு கூறுவிலைக்கோரல் படிவங்களைத் தலைவர், மாவட்டக் கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு (அரசாங்க அதிபர், முல்லைத்தீவு) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ முல்லைத்தீவு செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலை கோரல் பெட்டியில் 2005.08.10 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கூறுவிலைக்காரர் அல்லது அவரது எழுத்து மூலமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்கலாம்.

திருமதி இமெல்டா சுகுமார்
கேள்விச்சபைத் தலைவர்/அரசாங்க அதிபர்
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-12344)

# ஈராக்கில் இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில் தற்கொலை தாக்குதல்; 8 பேர் பலி; பலர் படுகாயம்!

(பாக்தாத்)


**ஈராக் பாக்தாத்தில் இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் எட்டுப்பேர் பலியாகியுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர்.**

முத்தன்ன விமானப்படைத்தளத்திற்கு புதிதாக இராணுவத்தினரை ஆட்சேர்க்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது நேர்முகத்தேர்விற்கு வந்தவர்களுடனேயே தற்கொலை குண்டுதாரியும் வந்து இக்குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

கைவிடப்பட்ட நிலையில் இருந்த இந்த விமானப் படைத்தளம் தற்போது இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு மையமாக செயற்பட்டு வருகின்றது.

இந்தத் தளம் மீது இம்மாத ஆரம்பத்திலும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி இருந்தனர். அதில் 70 பேர் பலியாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மெக்சிகோவின் எரிமலையொன்று புகை கக்கிய வண்ணம் காணப்படுகிறது.

# அரசியலமைப்பு குழு உறுப்பினர் மூவர் ஈராக்கில் சுட்டுக்கொலை

(பாக்தாத்)

ஈராக்கில் ஆயுததாரி ஒருவரால் அந் நாட்டின் புதிய அரசியலமைப்புக் குழு உறுப்பினர்கள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் பாக்தாத்திலுள்ள உணவகம் ஒன்றிலிருந்து வெளியேறும் போது ஆயுததாரி ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சன்னி முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த இவர்கள் மத்திய பாக்தாத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஈராக்கில் புதிய அரசியலமைப்பினை அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் வெளியிடும் நோக்கில் 71 பேர் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஷியா மற்றும் குர்திஷ் மதப் பிரிவினரை பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கத்தில் சன்னி முஸ்லிம் பிரதிநிதிகளை இணைப்பதன் மூலம் ஈராக்கில் இடம்பெறும் வன்முறைகளை முடிவிற்கு கொண்டு வர முடியும் என்று எதிர் பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஹமாஸ் தீவிரவாதிகள் பலஸ்தீன இராணுவம் மோதல்

(காசா)

பலஸ்தீன இராணுவத்தினரும் ஹமாஸ் தீவிரவாதிகளும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இஸ்ரேல் மீதும் பலஸ்தீன இராணுவம் மீதும் தாக்குதல் நடத்துவதை பொறுத்துக்கொள்ள மாட்டோம் என்று பலஸ்தீன அதிபர் அப்பாஸ், ஹமாஸ் தீவிரவாதிகளை எச்சரித்து இருந்தார்.

இந்த எச்சரிக்கையை தீவிரவாதிகள் பொருட்டாக மதிக்கவில்லை. இதைத் தொடர்ந்து இருதரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது. இருதரப்பினரும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்.

ஹமாஸ் ஆதரவு அலுவலகங்களுக்கு இராணுவம் தீ வைத்ததாகவும் ஹமாஸ் வாகனத்திற்கு தீ வைத்ததாகவும், தீவிரவாதிகள் இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

### பேருந்து–பாரவூர்தி மோதல் கென்யாவில் 22 பேர் பலி

(நைரோபி)

கென்யாவில் இடம்பெற்ற பேருந்து-பாரவூர்தி மோதலில் 22பேர் பலியாகியுள்ளனர். 40 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆபிரிக்காவில் உள்ள கென்யாவில் கிழக்கு கடலோரப் பகுதியிலுள்ள மாங்கு நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றார்கள்.



கரிபியன் கடலில் வீசிய எமிலி என்ற புயல்காற்று மெக்சிகோ நாட்டை தாக்கியது புயல்காற்றில் சிக்கிய சிறிய விமானம் ஒன்று பண்டகசாலை மீது விழுந்து கிடப்பதைப்படத்தில் காணலாம்

# பிரிட்டனில் தீவிரவாதிகளை கண்டுபிடிக்க விசேட உளவறியும் பிரிவு அமைப்பு

(லண்டன்)

பிரிட்டனில் நடமாடும் தீவிரவாதிகளைக் கண்டு பிடிக்கவும் அவர்கள் மேற்கொள்ளக்கூடிய தாக்குதல்களைத் தடுக்கவும் என நாட்டின் சகல பகுதிகளிலும், விசேட உளவறியும் பிரிவுகளை அமைப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. லண்டனின் மொற்றோ பொலிற்றன் பொலிஸ் நிலையத்தில் விசேட பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் இதற்கு தலைமை தாங்கவுள்ளனர். இது தொடர்பாக உள்துறையமைச்சுத் தகவல் தருகையில்;

முஸ்லிம்களுடன் தொடர்புகளை வைத்திருக்கும் பொலிஸ் பிரிவு பல தரப்பட்ட தகவல்களை ஏற்கனவே வழங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

வன் செயல்களுக்கென முஸ்லிம் இளைஞர்களை ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் முற் கூட்டியே தெரியவந்துள்ளதால் அத்தகைய ஆட்சேர்ப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏழாம் திகதி லண்டனில் இ டம்பெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொள்ளும் முதலாவது பயங்கரவாதத் தடை நடவடிக்கை இதுவாகும்.

# மெக்சிக்கோவை மேலும் புயல்தாக்கும் அச்சம்; பாதுகாப்பான பகுதிகளுக்கு மக்கள் இடம்பெயர்வு

ஹரிபியன் தீவுகளில் ஐந்து பேர் உயிரிழக்கக் காரணமாக இருந்த எமிலி என்ற புயற்காற்று மெக்சிக்கோ மற்றும் ரெக்ஷாஸ் மாநில எல்லைகளில் மோதக்கூடும் என்ற அச்சத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். அங்கு கடுமையாக வீசிய புயற்காற்று காரணமாக நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன. மரங்கள் வேரோடு சாய்க்கப்பட்டுள்ளன.

ஹரிபியன் தீவுகளில் இந்தப் புயற்காற்று கடந்த திங்கட்கிழமை வீசியதனால் மின்விநியோகம் முற்றாகத் தடைப்பட்டது. எண்ணெய் ஏற்றுமதி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன. கடும் மழை பெருவெள்ளம் காரணமாக ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை ஹைடான் என்ற புயற்காற்று சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் நேற்று மோதியதனால் பத்தாயிரம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

பெருவெள்ளத்தால் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உள்நாட்டை நோக்கி சூறாவளி நகரத்தொடங்கியது. அது பலம் இழந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ரனாளின் என்ற புயற்காற்று இப்பிரதேசத்தில் வீசியதனால் 164 பேர் இறந்துள்ளனர். 200 கோடி டொலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



லண்டன் குண்டு வெடிப்புச் சந்தேக நபரான ஹிஜாதுல்லாவை லாகூரில் கைது செய்துள்ள பாகிஸ்தான் பொலிசார்

# தலிபான் தீவிரவாத இயக்க நிர்வாகிகள் பாகிஸ்தான் இராணுவத்தால் கைது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள ஆப்கான் அகதிகள் முகாமில் பதுங்கி இருந்த தலிபான் தீவிரவாத இயக்க நிர்வாகிகளை இராணுவம் கைது செய்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிககா தாக்குதல் நடத்திய பின்பு அங்கு இருந்த தலிபான் தீவிரவாதிகள் அண்டை நாடான பாகிஸ்தானுக்குத் தப்பி ஓடினர்.

வடக்கு வசீரிஸ்தான் மாநிலத்தில் மறைந்து வாழும் தீவிரவாதிகளைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கும் நடவடிக்கையில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டது.

அகோரா கட்டாக் நகரில் உள்ள ஆப்கான் அகதிகள் முகாமில் இராணுவம் சோதனையிட்டது. அங்கு பதுங்கி இருந்த சில தலிபான் தீவிரவாதிகளை இராணுவம் கைது செய்தது. தலிபான் இயக்கத் துணைத் தலைவரான (தலைவன் முல்லா முகமது ஓமர்) மௌலவி அப்துல் கபீர் என்பவரும் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

# முதியவர்களை கவனிக்க ஜப்பானில் இயந்திர மனிதர்கள் தயாரிப்பு

(டோக்கியோ)

முதியவர்களைக் கவனித்துக் கொள்வதற்கான இயந்திர மனிதர்களைத் தயாரிக்கும் பணியில் ஜப்பான் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஐரோப்பா அமெரிக்கா போல குறைந்த சம்பளத்துக்கு வெளிநாட்டுத் தொழிலாளர்களை அனுமதிப்பதற்கு ஜப்பான் தயங்குகிறது. அதனால் இதனைத் தயாரிக்கும் பணியில் ஜப்பான் ஈடுபட்டுள்ளது.

இப்போது இயந்திர மனிதர்கள் தொழிற்சாலைகளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வீடுகள், அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகளில் பயன்படுத்தக்கூடிய இயந்திர மனிதர்களை உருவாக்கும் பணியை ஆராய்ச்சியாளர்கள் தொடங்கி விட்டனர். முதியவர்களைத் தூக்குவது அவர்களின் தேவைகளைக் கவனிப்பது போன்றவற்றைச் செய்வதற்கான இயந்திர மனிதர்களை சுகுபா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் சங்காய் மேற்கொண்டு இருக்கிறார்.

உலகம் முழுவதும் எட்டு இலட்சம் இயந்திரமனிதர்கள் உள்ளன. அவற்றில் 44 சதவீதம் ஜப்பானில் தான் உள்ளன.

# அணுவாயுதப் பிரச்சினை குறித்து வடகொரியாவில் பேச்சுவார்த்தை

(சியோல்)

வடகொரியாவின் அணுவாயுதப் பிரச்சினை குறித்து 26 ஆம் திகதி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

வடகொரியா அணு ஆயுதம் தயாரிப்பதை கைவிடுவதற்காக நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் இருந்து 19 மாதங்களுக்கு முன்பு வடகொரியா விலகிக்கொண்டது.

மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வடகொரியா ஒப்புக்கொண்டது. இதைத் தொடர்ந்து வருகிற 26ஆம் திகதி மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்குகிறது. இதில் அமெரிக்கா, சீனா, ஜப்பான், ரஷ்யா, வடகொரியா, தென்கொரியா ஆகிய ஆறு நாடுகள் கலந்துகொள்கின்றன.

# தென்னை அபிவிருத்திசபை உத்தியோகத்தரின் சிபார்சு இல்லாத நாற்றுக்கள் விற்பனைக்குத் தடை

(கிளிநொச்சி

**தென்னை அபிவிருத்திச் சபை உத்தியோகத்[illegible]ளின் சிபார்சு இன்றி உற்பத்தி செய்யப்படும் தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு அனுமதிக்கப்படமாட்டாது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.**

தமிழீழ பிரதேசங்களில் அதிகளவாக பயிரிடப்படும் பெருந்தோட்டப் பயிர்களில் தென்னையும் ஒன்றாகும். ஒரு தென்னை மரத்தின் சராசரி ஆயுட் காலம் அறுபது தொடக்கம் எண்பது வருடங்களாகும். நடுகை செய்து ஐந்து வருடங்களின் பின்னரே பயன் தரும். பயன்கிடைக்கும் போது தான் அது தகுதியான விதைத் தேங்காயில் இருந்து பெறப்பட்டதை உறுதி செய்யலாம்.

விதைத்தேங்காய் தகுதியற்றது என தெரியவருகையில் ஒரு நடுகையாளரின் ஐந்து வருட உழைப்பு வீணாகின்றது விதைத் தேங்காய் தெரிவு என்பது பல காரணிகளை உள்ளடக்கியுள்ளதால் தென்னை நாற்றுக்களை விற்பனை செய்வோர் தமது விதைத்தேங்காய்களை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக உறுதி செய்த பின்னர் நடுகை செய்யுமாறு வேண்டப் படுவதுடன் இனிவரும் காலங்களில் இவ் வேலைத்திட்டங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர்களால் கண்காணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

# வீர முரசு வார அரங்கு

(முல்லை)

முல்லைமாவட்டத்தில் வாரந்தோறும் நடைபெறும் வீரமுரசு வார அரங்கு கடந்த திங்கட்கிழமை இரவு 8.00 மணிக்கு கரிப்பட்ட முறிப்பு பாடசாலை மைதானத்தில் கரிப்பட்ட முறிப்பு அ.த.க பாடசாலை அதிபர் தயாநிதி தலைமையில் இடம் பெற்றுள்ளது.

நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றினார்.

தொடர்ந்து இப்பகுதி மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலையினையும் அணிவித்தார்கள்.

தொடர்ந்து சமகால அரசியல் நிலவரம் தொடர்பாக தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் வழங்கினார்கள்.

தொடர்ந்து பெரியபுளியங்குளம் அ.த.க பாடசாலை மாணவர்கள், கரிப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடை பெற்றன இந்த நிகழ்வுக் கான உணவு, தேநீர் ஒழுங்குகளை கரிப்பட்ட முறிப்பு சமூக அபி விருத்திக் குழுவினர் மேற் கொண்டனர். இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# ஒக்ஸ்பாம்நிறுவன நிதியுதவியுடன் மாயவனூரில் 70 மலசல கூடங்கள்

(வட்டக்கச்சி)

ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் மாயவனூர் கிராமமக்களுக்கான மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந் நடவடிக்கையின் முதலாம் கட்டம் முடிவடைந்து தற்போது இரண்டாம் கட்டம் ஆரம்பமாகி வேலைத் திட்டங்கள் தொடர்ந்து' வருகின்றது.

மாயவனூர் கிராமத்தில் 70 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் பூர்த்தியாகி மக்களிடம் கையளிக்கும் நிலையில் உள்ளன, அடுத்த கட்ட மலசல கூட அமைப்பு வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (12)

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவு திட்டத்தில் மன்னார் மாவட்ட அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(மன்னார்)

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் 2005ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கிராமியவீதிகள் திருத்தல், மின்சார இணைப்புக்கள் வழங்குதல் விளையாட்டுக்களை ஊக்குவித்தல் போன்ற வற்றிற்கே மேற்படி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அத்துடன் மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவை மேலதிக ஊக்குவிப்பாக வழங்கியுள்ளார். (18)

# கடலோரப் பகுதி சிறுவர்களின் அச்சத்தைப் போக்க நீச்சல் கற்றுக் கொடுக்க சுவீம் லங்கா நிறுவனம் நடவடிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள ஆறு வயது தொடக்கம் 12 வயதான குழந்தைகளுக்கு நீச்சல் கற்றுக் கொடுக்கும் செயற்றிட்டம் ஒன்றை சுவீம்லங்கா என்ற அமைப்பு நடைமுறைப்படுத்தவிருக்கின்றது. சுவீம்லங்கா அமைப்பின் பிரதிநிதிகள் அண்மையில் திருகோணமலைக்கு சென்று திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகிகளுடன் திருமலையில் இத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். குச்சவெளி, ஈச்சிலம்பத்தை, மூதூர், கிண்ணியா ஆகிய பிரதேசங்களில் நீச்சல் பயிற்சியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதென இணக்கம் காணப்பட்டது. கடற்கோளைத் தொடர்ந்து கடலோரப் பகுதிகளில் வாழும் குழந்தைகள் கடல் நீரைக் கண்டாலே அச்சப்படும் நிலை காணப்படுவதாகவும், அந்த அச்சத்தைப் போக்கும் வகையில் நீச்சல் பழக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அச்சத்தைப் போக்க முயற்சிக்கப்படும் என்று சுவீம்லங்கா அமைப்புத் தெரிவித்துள்ளது. இத் திட்டத்தின் முதற் கட்டமாக கடல் பற்றிய அச்சம் நீக்குவது இரண்டாவது கட்டமாக எல்லாக் குழந்தைகளும் நீச்சல் பழகுவதும் பயிற்றுவிப்பதும் தேசிய பாட விதானத்தின் ஒரு பகுதியாக நீசசலை இணைப்பது என்று சுவீம் லங்கா அமைப்பினர் தெரிவித்தனர். கடற்கோளின் போது நீந்தத் தெரியாத காரணத்தினால் தான் பலர் உயிரிழந்தனர். என்றும் நீந்தத் தெரிந்திருப்பின் பலரின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் என்றும் சுமீம் லங்கா அமைப்பினர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கடற்கோளினால் அழிந்து போன வேலூர்க் கிராமத்தின் புனர்நிர்மாண வேலைகளை மேற்கொண்டு வரும் ஜேர்மன் வாஹ்ன் ஸ்ரிப்ரஸ் என்ற அரச சார்பற்ற அமைப்பு, வேலூரில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்கள் மீண்டும் தங்களது தொழிலை ஆரம்பிக்க ஏதுவாக சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியான 41 நீரிறைக்கும் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இக் கையளிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிலாவெளி வேலூர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கே.இரட்ணகுமார், ஜேர்மன் அமைப்பின் சார்பில் சி.சுந்தரமூர்த்தி, எஸ்.குமரகுரு ஆகியோர் நீரிறைக்கும் இயந்திரங்களை பயனாளிகளான விவசாயிகளுக்கு கையளித்தார்கள். ஜேர்மன் நிறுவனம் வேலூரில் கடற்கோளினால் அழிக்கப்பட்ட முன்பள்ளி கட்டடத்திற்குப் பதிலாக புதிதாக இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றை தனதுசொந்தச் செலவில் நிர்மாணித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



**பிரதேச சபையினரால் வழங்கப்பட்ட குறியீட்டு நிறப் பைகளுக்குள் இடப்பட்டு வியாபார நிலையங்களுக்கு முன்பாக வைக்கப்பெற்ற குப்பை கூழங்கள் கரைச்சி பிரதேச சபையினரால் அப்புறப்படுத்தப்படுவதனைப் படத்தில் காணலாம். (படம் :- சோதி)**

# பொலிசாரின் பொறுப்பில் இருந்த முச்சக்கரவண்டிக்குள் குண்டு

(திருகோணமலை)

திருகோணமலை பொலிசாரின் பொறுப்பில் இருந்த முச்சக்கரவண்டியினுள் இருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

குறித்த முச்சக்கரவண்டி கடந்த 15 ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டது. நேற்று முன்தினம் குறித்த முச்சக்கரவண்டி நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டது. இந்த நிலையில் முச்சக்கரவண்டியை அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியில் எடுத்து வந்தவேளையில் அதிலிருந்த குண்டு கீழே வீழ்ந்துள்ளது. இது தொடர்பில் பொலிசாருக்கு முறையிடப்பட்டமையை அடுத்து மீண்டும் குறித்த முச்சக்கரவண்டியை பொலிசார் தடுத்து வைத்துள்ளனர்.

**கிளி. தேசிய எழுச்சிப்பேரவை மாநாட்டில்**



**ஓகஸ்[illegible] நடுப்பகுதியில் மக்கள் எழுச்[illegible] நாளை கிளிநொச்[illegible]ல் நடாத்துவதற்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் [illegible]ளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் [illegible]ணைய மண்டபத்தில் கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினால் நடாத்தப்பெற்றபோது கலந்து கொண்ட பேராளர்களை படத்தில் காணலாம். (படம் :சோதி,குகன்)**

## வவுனியா - தரணிக்குளத்தில்

# பேருந்து - உந்துருளி விபத்து இரு ஆசிரியைகள் படுகாயம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தரணிக்குளத்தில் கடந்த செவ்வாய் மாலை இடம்பெற்ற பேருந்து- உந்துருளி விபத்தில் இரு ஆசிரியைகள் படுகாயமடைந்துள்ளனர்.

தரணிக்குளத்தில் இருந்து வவுனியா நோக்கி [illegible] கொண்டிருந்த பேருந்து தரணிக்குளத்தில் [illegible]ாக நிறுத்தி வைக்கப்பட்டு பயணிகள் [illegible]ண்டிருக்கும் போது, தரணிக்குளம் [illegible]யில் இருந்து வவுனியா நோக்கி உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த இரு ஆசிரியைகளும் பேருந்தின் பின் புறத்தில் மோதுண்டுள்ளனர்.

இதனால் அவ் உந்துருளியில் பயணித்த இரு ஆசிரியைகளும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தரணிக் குளம் கணேஷ் வித்தியாலயத்தைச் சேர்ந்த திருமதி- நளினி - வரதராஜன் என்ற ஆசிரியையும், இன்னொரு ஆசிரியையுமே இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களாவர். (10;

# அடிக்கல் நாட்டு விழா

(வட்டக்கச்சி)

ஒக்ஸ்பாம் நிறுவன நிதி உதவியுடன் கிளி/கிழக்கு 'புனர்வாழ்வு நிறுவனத்தின் ஒழுங்கு படுத்தலில் ஆலடிக் கிராமத்தில் மனோகரி முன்பள்ளி வளாகத்தில் பொது மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த எட்டாம் ஆம் திககி இடம்பெற்றுள்ளது.

கிளி /கிழக்[illegible] புனர்வாழ்வு நிறுவன இணைப்பாள[illegible]ஞ்சினி தலைமையில் இடம் பெற்றுள்ள நிகழ்வில் மங்கல விளக்கினை கல்மடு நகர் கிழக்கு அ.த.க பாடசாலை முதல்வர் ரவீந்திரன் கிளி மாவட்ட நிதி மேலாளர் மயூரன் ஏற்ற, தேசியக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக வட்டக்கச்சி பிரதேச உதவி பணிப்பாளர் நவநீதன் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து பொது மண்டபத்திற்கான அடிக்கல்லினை நிறுவன செயலாளர் மு. குமாரசாமி நாட்டி வைத்தார். அதனைத் தொடர்ந்து கருத்துரைகளை போராளிகளும் நிறுவன உறுப்பினர்களும் நிகழ்த்தினர். (12

# சனசமூகக் கட்டடம் திறந்து வைப்பு

(மன்னார்)

தலை மன்னார் படைப் படி கிராம மக்களின் நலன்கருதி சனசமூக கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர பிரதேச செயலாளர் ஸ்ரானிடிமெல் நந்தினி குரூஸின் முயற்சியினால் மேற்படி கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம் மக்கள் கடந்த காலங்களில் சந்திப்புக்கள், கூட்டங்களை மர நிழல்களின் கீழ் நடத்தி வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (18)

# யாழ். குடாநாட்டில் பதினெட்டுப் பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமிப்பு

## -அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தின் பலாலி உள்ளிட்ட 18 பகுதிகளில் படைத்தரப்பு உயர் பாதுகாப்பு வலயங்களெனக்கூறி மக்கள் குடியிருப்புப்பகுதிகளை ஆக்கிரமித்திருப்பதாக யாழ்.மாவட்ட அரச,அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் தனது மாதாந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது.**

ஜூன் மாதத்திற்கான தமது மாதாந்த அறிக்கையினை நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் வெளியிட்டுள்ளது.

190 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இவ் உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்து 30 ஆயிரத்து 388 குடும்பங்கள் நலன்புரிமுகாம்களிலும், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுக்கொள்கைகளிற்கான நிறுவனத்தினரால் சேகரிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான புள்ளிவிபரங்களை வெளிப்படுத்தி இவ்வறிக்கையினை வெளியிட்டிருக்கும் இணையம், இவ்வுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக 81.5 சதுரகிலோமீற்றர் பரப்பளவுடைய கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. அத்துடன் 12 ஆயிரத்து 259 ஏக்கர் விவசாய நிலம் தொடர்ந்தும் பயிர்ச்செய்கைகளுக்குத் தடைசெய்யப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் கூட எந்தவொரு முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லையென தெரிவித்துள்ள இணையம், "தமிழ்த் தேசியத்தின் குரல்" எனும் பெயரில் யாழ். வெகுசன அமைப்புக்களால் அண்மையில் வெளியிடப்பட்ட சுயநிர்ணயம், சொந்தநிலம் மற்றும் மொழி உரிமை தொடர்பான கோஷங்களையும் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே குடாநாட்டின் கலவி நிலை தொடர்பாக இவ்வறிக்கையில் விபரித்துள்ள இணையம் யாழ்.நகரின் கரையோர கிராமங்களான பாசையூர், குருநகர்,நாவாந்துறை, காக்கைதீவு மற்றும் கொழும்புத்துறை கிராமங்களைச் சேர்ந்த 100இற்கு அதிகமான சிறார்கள் இவ்வாண்டில் கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கிறது. எட்டு தொடக்கம் 15 வயதிற்கிடைப்பட்ட இவர்கள் வறுமை மற்றும் வீட்டுச்சூழல் காரணமாகவே கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (27)

# 'ஹலோ டிரஸ்ற்' பணியாளர் காணாமல் போயுள்ளார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள "ஹலோடிரஸ்ற்" தொண்டமைப்பின் பணியாளர் ஒருவர் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார். இது தொடர்பாக காணாமல்போன பணியாளரான மார்க்கண்டு பார்த்தனனின் (வயது-21) பெற்றோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் புகார் செய்துள்ளனர்.

வடமராட்சி பருத்தித்துறையின் நெல்லண்டப்பகுதியைச்சேர்ந்த குறித்த இளைஞர் இம்மாதம் ஏழாம் திகதி மாலைவேளை பருத்தித்துறையிலுள்ள தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் பின்னர் வீடு திரும்பவில்லையெனவும், அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே குறித்த இளைஞன் காணாமற்போனமை தொடர்பாக அவரது பெற்றோரால் தமக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் பருத்தித்துறைப் பொலிசார் தாம் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கண்ணிவெடியகற்றல் பணிகளில் ஹலோடிரஸ்ற் அமைப்பு ஈடுபட்டுள்ளநிலையில் கடந்த ஆண்டில் நல்லூர் பகுதியிலுள்ள அதன் வாகனத்தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் சில இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

# ஆசிரியர்கள் வரவு தாமதம்; அதிகாரி திடீர் சோதனை

(தென்மராட்சி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் நேரம் பிந்தியே பாடசாலைக்குச் சமுகம் அளிப்பதாக கிடைத்த தகவலை அடுத்து திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை தென்மராட்சி வலயக்கல்வி அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் வருகை பிந்திய காரணத்தால் அவர்களுடைய வருகைப் பதிவேட்டில் சிவப்புமையினால் அதிகாரி கையெழுத்திட்டு சென்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. தொடர்ச்சியாக கல்வி அதிகாரிகளை அனுப்பி ஆசிரியர்களின் வருகையினைக் கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## -சுனாமியால் பாதிக்கப்பட்டோரின்-

# அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படை உரிமைமீறல்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரில் சென்று ஆராய்ந்து வருகின்றனர்.

இதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி ரோஹித பிரிதர்சன தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளான வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களுக்குச்சென்று மக்களுடன் நேரில் கலந்துரையாடி மக்களுக்குள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.

இதில் குறிப்பாக அதிகாரிகள் காட்டும் பாரபட்சம், இராணுவ நெருக்கடி, நிவாரணம் சம்பந்தமான பிரச்சினைகள், சுகாதார குடிநீர் வசதிகள் போன்ற அடிப்படை உரிமைகள் பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டது.(33)

# யாழ். நகரின் மையப் பகுதியில் காவலரண் பலப்படுத்தல்; படையினர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற இராணுவ காவலரண்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளதோடு கடும் பயிற்சிகளிலும் ஈடுபட்டுவருவது மக்கள்மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த இரண்டு தினங்களாக யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியில் புதிய காவலரண் ஒன்றை அமைக்கும் பணியில் சிங்களப் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த இடத்தில் மரம் ஒன்றின் கீழ் இரு சிங்களச் சிப்பாய்களே காவல் கடமையில் ஈடுபட்டு வந்தனர். தற்போது புதிதாக காவலரண் அமைக்கப்பட்டு வருகின்றமை மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை வைத்தியசாலை வீதியில் அமைந்திருக்கின்ற காவலரண்களில் கடமையில் இருக்கின்ற படைச்சிப்பாய்களுக்கு பிற்பகல் வேளைகளில் பயிற்சி வழங்கப்பட்டும் வருகின்றது. இந்தப் படைமுகாமும் பலப்படுத்தப்பட்டு வருகின்றது.

சில நாட்களாக யாழ். வைத்தியசாலை வீதியில் மாலை நேரங்களில் படைச்சிப்பாய்களுக்கு பயிற்சி வழங்குவதனால் வீதிப்போக்குவரத்து தடைப்படுகின்றது. இதனால் வாகனங்களும், மக்களும் காத்திருந்தே போக்குவரத்துச் செய்யவேண்டியுள்ளது.

வழமையைவிட நகரில் இராணுவத்தினரின் நடமாட்டமும் அதிகரித்திருக்கின்றது. இரவுவேளைகளில் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். படையினர் வைத்தியசாலை வீதி, கண்டிவீதி, அரியாலை, கொழும்புத்துறை, ஸ்ரான்லி வீதி போன்ற பகுதிகளில் இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றவேளையில் ஸ்ரீதர்திரையரங்கில் நிலை கொண்டுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்திற்கு முன்பு படைச்சிப்பாய்களும், பொலிசாரும் அதிகமாகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர். (கீ)

# யாழ். வலிகாமம் கல்வி வலயத்தில் 496 ஆசிரியர்களுக்கு வெற்றிடம்

## –வலயக்கல்விப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் கல்விவலயத்திலுள்ள பாடசாலைகளில் 496 ஆசிரிய வெற்றிடங்கள் நிலவிவருவதாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னே ்வரன் கூறினார்.

இதன் காரணமாக வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி எதிர்காலம் கவலைக்கிடமாகியுள்ளமை பற்றியும் அவர் கவலை தெரிவித்தார்.

குறிப்பாக ஆரம்பக்கல்வி ஆங்கிலக்கல்வி, அழகியற்கல்வி ஆகிய பாடப்பிரிவுகளிலேயே இத்தகைய வெற்றிடங்கள் அதிகம் நிலவி வருவதாக வலிகாம வலயகல்விப் ணிப்பாளர் தெரிவித்தார்.

வலிகாமம் கல்விவலயத்தில் 200 ஆரம்பக்கல்வி ஆசிரியர் வெற்றிடங்களும், 250 ஆங்கில கல்வி ஆசிரிய வெற்றிடங்களும் 46 அழகியல்கல்வி மற்றும் ஏனைய ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாகவும் சுட்டிக்காட்டினார்.இந் நிலைமையால் பல ஆயிரக்கணக் கான மாணவர்களின் எதிர்காலக கல்வி பாதிப்பதாகவும் அவர் கூறினார். (33)

# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை, மற்றும் புங்கன்குளப் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. நேற்று முன்தினம் இரவு கொழும்புத்துறை பகுதியில் ஒரே இரவில் இரண்டு வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். யன்னல் கம்பியினை உடைத்து உட்சென்று பெறுமதியான பொருட்கள் மற்றும் தொலைபேசி என்பனவற்றை களவாடிச் சென்றுள்ளனர்.

இதேபோன்றே யன்னல் கம்பியினை உடைத்து களவாடும் சம்பவங்கள் ஏற்கனவே பல வீடுகளில் இடம் பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (கீ)

# நெடுந்தீவு உ.அ.அ.பணிமனையில் புதிய கட்டடத்தொகுதிக்கு அடிக்கல்

(நெடுந்தீவு)

யாழ்.நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை வளாகத்துள் புதிதாக கட்டடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்குடன் அமைக்கப்படவுள்ள இக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளுக்கென பல மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். (33)

# பனை,தென்னைவள அபிவிருத்தி சமாசத்திற்குப் புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கென புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்தை யாழ். சுண்டிக்குழியில் இருக்கும் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்குச் சொந்தமான இடத்தில் நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டடஅமைப்பு நடவடிக்கைகளுக்கென முதற்கட்டமாக யாழ். அரச செயலகத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பனை, தென்னைவள அபிவிருத்தியை நம்பிவாழும் மக்களின் நலன் கருதியே இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (33)

# எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்க கோரிக்கை

(மல்லாகம்)

மல்லாகம் சந்தியில் மண்ணெண்ணை நிரப்பு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் அப்பகுதியில் உள்ள பல நூற்றுக்கணக்கான விவசாயிகள் கூடிய பயனைப் பெறமுடியுமென அப்பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

தற்பொழுது மல்லாகம் சந்தியில் அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் இயங்குகின்ற போதிலும் அங்கு விவசாயிகளுக்குத் தேவையான மண்ணெண்ணையைப் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இங்கு மண்ணெண்னை விநியோகம் செய்யும் வசதியை ஏற்படுத்தினால் கட்டுவன், ஏழாலை, மல்லாகம் மற்றும் அதனை சூழ உள்ள மக்களும் கூடிய பயனடையமுடியும் எனத் தெரிவிக்கின்றார்கள். (41)

# அரசியல் கடன்களைத் தீர்க்கமுன்

# திருவிழா முடியப்போகிறது —

**இப்பொழுது** நாட்டின் பெரும்பான்மை பலம் இல்லாத கட்சி ஆட்சியை நடத்துகின்றது. 1960ஆம் ஆண்டு மார்ச்மாதம் ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் டட்லி சேனநாயக்கவிற்கும் இதே கதிதான் ஏற்பட்டது. பலம் இல்லாத சிறுபான்மை அரசு என்பதால் மூன்று மாத ஆட்சிக்குப் பின்பு அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க 1960ஆம் ஆண்டு யூலை மாதம் அரசாங்கத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினார். அதில் ஐக்கியக் தேசிய கட்சி தோல்வியைத் தழுவிக்கொண்டது. சிறுபான்மை அரசு ஆட்சி நடத்தும் பொழுது எதிர்க்கட்சியின் குறுக்கீடு ஏற்பட்டால் அந்த அரசாங்கத்தால் ஆட்சியை நடத்தமுடியாது மற்றும் பாராளுமன்றத்தில் நாட்டிற்குத் தேவையான முக்கியமான சட்டங்களை நிறைவேற்ற முடியாது.

வைத்துக்கொள்ள முடியும். சிறுபான்மை பலம்கொண்ட அரசாங்கம் புதிய அமைச்சுப் பதவிகளை கொடுத்து எதிர்கட்சியில் பதவியோகம் கொண்டவர்களை இணைத்துக் கொண்டு ஆட்சியை நீடிப்பதற்கு முயற்சிக்கும். ஆகவே கணிசமான புதிய அமைச்சுக்களை ஏற்படுத்தி அரசாங்கத்தை தக்கவைத்துக் கொள்ளும் உபாயத்தை கடைப்பிடிக்கலாம்.

எல்லாக் கட்சிகளிலும் மதில்மேல்பூனை மாதிரியானவர்களும் இருக்கின்றனர். இதேபோல் இந்தியாவில் சில மாகாணங்களில் 90 அமைச்சர்கள் ஆட்சி செய்கின்றார்கள்

இலங்கைக்கு சர்வசன வாக்குரிமை 1931ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. இலங்கையைச்சேர்ந்த ஏழு பேரும் இங்கிலாந்தை மூன்று பேரும் அமைச்சரவையில் அங்கம் வகித்தார்கள். அன்று பத்து அமைச்சர்களை வைத்திருந்த பொறுப்புக்களை தற்பொழுது 70,80 அமைச்சர்கள் வைத்திருக்கின்றனர்.



தற்போதைய சிறுபான்மை அரசுக்கு எதிர்வரும் வரவு - செலவுத்திட்டம் பெரும் சவாலாக அமையலாம். நல்லதொரு வரவு செலவுத் திட்டத்தை நாட்டுமக்களுக்கு முன்வைத்தாலும் எதிர்கட்சி இதற்கு ஆதரவு வழங்காது

இந்த நாட்டின் சரித்திரத்தில் எந்த ஒரு வரவு செலவுத்திட்டமும் ஏகமனதாக நிறைவேறவில்லை. முதலாவது வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பில் தோல்வி கண்டால் மேலும் அதில் திருத்தங்களை செய்து பாராளுமன்றத்தில் இரண்டா

பெரும்பான்மை பலத்தால் ஆடசி நடத்த முடியாது பாராளுமன்றத்தில் 2/3 அல்லது5/6 பெரும்பான்மையை கட்சிகள் பெறுவ தென்றால் அதுபெரும் அதிசயமாகத்தான் இருக்க முடியும்.

வியாபாரத் தேர்தல் முறை என இதை நாங்கள் கூறமுடியாது அப்படி வியாபாரம் செய்தாலும் அதில் இலாபத்தை எதிர்பார்த்துதான் முதலாளி முதலீடு செய்வார். 1970ஆம், 1977ஆம் ஆண்டில் நடந்தபொதுத்தேர்தல்களில் ஒவ்வொரு கட்சிகளுக்கும் கிடைத்த விகிதாசர முறைகளின்படி 1977ஆம் ஆண்டில் அதிக வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினரை தேர்தெடுப்பதற்கு 20000 வாக்குகள் போதுமானதாக இருந்தது. அதில் தோல்வி கண்ட எதிர்கட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இரண்டு இலட்சத்து இருபது ஆயிரம் வாக்குகளைப் பெற்றால்தான் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு செல்லமுடியும். 1970ஆம் ஆண்டு எதிர்கட்சிக்கு இதே நிலை தான் ஏற்பட்டது. ஆனால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு 30000 வாக்குகளைப்பெற்றால்போதும் அதேபோல் எதிர்கட்சி ஒருவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கு இரண்டு இலட்சத்திற்கும் அதிகப்படியான வாக்குகள் தேவைப்பட்டது.இதனை நீக்குவதற்குத்தான் மாகாணமட்டத்தில் விகிதாசார தேர்தல் முறையை ஜே.ஆர்.ஜயவர்த்தனா அறிமுகப்படுத்தினார். இதில் சிறுபான்மை கட்சியினர் அதிக இலாபங்களைப் பெற்றனர்.

இந்த நாட்டில் பிரதான இரண்டு அரசியல் கட்சிகளின் ஒற்றுமை இன்மையின் காரணத்தால் பொதுமக்கள் அரசியல் கலாசாரத்தினால் பாதிக்கப்பட்டு அரசியலையும் வெறுக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த இரண்டு கட்சிகளும் தங்களின் கட்சிகளைப் பலப்படுத்துவதற்கு எடுத்து வரும் முயற்சிகளின் காரணமாக நாட்டுக்கு இன்றுபெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனை 1815ஆம் ஆண்டு

வெளிநாடுகளிடமிருந்தும் தனக்குக் கிடைக்கும். அதை இழக்க அவர் தயாராக இல்லை.

எதிர்கட்சித் தலைவரும் சனாதிபதியின் நிலைப்பாட்டிலேயே உள்ளார். எவ்வளவு இதயசுத்தியுடன் இத்தலைவர்கள் செயற்பட்டாலும் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு விரும்ப மாட்டார்கள். ஆனால் அதன் முழு வெற்றியையும் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் வெகுவிரைவில் பெற்றுக் கொள்வார்.

ஐக்கிய தேசியக்கட்சியினர் தற்பொழுது மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து சனாதிபதித் தேர்தல் இவ் வருட இறுதியில் நடத்தப்படவேண்டும் என பாதயாத்திரை செய்கின்றனர் சனாதிபதித் தேர்தலை இவ் வருடம் நடத்துவதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் எதிர்க்கட்சி தலைவருக்கு உதயமாகி இருக்கின்றது. அரசாங்கத்தில் அநேக குறைபாடுகள் இருக்கின்றன. வெற்றி எதிர்க்கட்சியினர் பக்கம் சாய்ந்துள்ளது சனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடக்கும் என அரச தரப்பு கூறுகின்றது. அடுத்த வருட இறுதிக்குள் இந் நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் அப்படி தீர்த்தால் பொதுத் தேர்தலில் தாம் போட்டியிட்டு மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பலத்தை இந் நாட்டில் நிலை நிறுத்த முடியும் என்பதே அவரின் எண்ணமாகும். சனாதிபதியின் அரசியல் நடவடிக்கைகள் அதை வெளிப்படுத்தி உள்ளன.

சட்டப்படி இதனைத் தீர்க்காமல் கட்சியின் நலன்களை கருத்திற்குகொண்டே தீர்ப்பதற்கு சனாதிபதி முயல்கின்றர்.

ஐக்கிய தேசியகட்சியின் சட்ட ஆலோசகர்கள் இவ் வருடம் சனாதிபதி தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கூறுகின்றார்கள். ஆனால் சுதந்திரக்கட்சியின் சட்டஆலோசகர்கள் அடுத்தவருடஇறுதியில் சனாதிபதித் தேர்தல்கள் நடக்கும் என கூறுகின்றனர். இந்த இரண்டு வாதவிவாதங்களுக்கு காரணங்களும் உண்டு தேர்தல் ஆணையாளரும் மற்றும் உயர்நீதி மன்றமும் எதிர்வரும் காலங்களில் நல்ல முடிவை நாட்டு மக்களுக்குத் தருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.'

ஆனால் தற்போதைய அரசியல் நிலவரங்களின்படி அரசாங்கமோ அல்லது எதிர்கட்சியோ பொதுத்தேர்தல் ஒன்றை சந்திக்கத் தயாராக இல்லை. இதனால் அரசாங்கம் ஆட்சி நடத்துவதற்கு எதிர்கட்சியினரால் எதிர்ப்புக்கள் ஏற்படாது. ஆனால் சனாதிபதித் தேர்தலையோ அல்லது பொதுத்தேர்தலையோ நடத்தி அதில் வெற்றி பெறுவது தற்போதைய நிலையில் எதிர்க்கட்சிக்கு மிக அவசியமாகும் . அதற்காகவே தற்பொழுது எதிர்ப்பு ஊர்வலங்களை எதிர்கட்சியினர் நடத்துகின்றனர்.

பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த வேண்டுமானால் அமைச்சர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பெரும் நிதி தேவைப்படுகிறது. இந்த ஒருவருட ஆட்சியில் அரசின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் தொகுதிகளுக்கு சேவ செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். எப்பொழுதும் இவர்கள் தோல்வியைத் தழுவிகொள்ள விரும்பமாட்டார்கள்.

ஆட்சியில் தொங்...கொண்டு பதவிகளைத் தக்க வைத்துக்கொண்டு இருப்பதையே விரும்புவார்கள். ஆகவே இவர்கள் பொதுத் தேர்தலை தற்பொழுது விரும்பமாட்டார்கள்.

ஆனால் பெரும்பான்மை இல்லாத அரசு நாட்டின் ஆட்சியை நீடித்து நடத்துவதற்கு பாராளுமன்றத்தில் ஏனைய எதிர்க்கட்சி அங்கத்தவர்களை இணைத்துக்கொண்டு மீண்டும் ஆட்சியை பலப்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றமையால் எதிர்க்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளின் செயற்பாடுகளைப் பொறுத்தே ஆட்சியைத் தக்க

வது தடவையாகவும் சமர்ப்பிக்கலாம். ஆனால் இங்கு அதைச்செய்ய முடியாது.வரவு செலவுத்திட்டம் தோல்வி கண்டால் அரசாங்கம் பதவிவிலகி பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும்.

ஆனால் சனாதிபதி அவர்கள் நல்லதொரு வரவு -செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தோம். ஆனால் பாராளுமன்றத்தில் அரசுக்கு அதிகபெரும்பான்மை இல்லாமையால் வரவு செலவுத்திட்டம் தோல்வி கண்டமையால் அரசாங்கத்தை கலைக்க நேரிட்டதென மக்களுக்கு அறிவிப்பார்.இது நாட்டு மக்களுக்கு ஒரு சாபக்கேடு என தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு அவரால் கூறமுடியும். தான் அரசாங்கத்தை கலைக்கவில்லை பாராளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டம் தோல்வி கண்டபடியால் அரசாங்கத்தை கலைக்கநேரிட்டது எனவும் இதனால் மக்கள் பொதுத்தேர்தல் ஒன்றை சந்திப்பதற்கு தயாராகுங்கள் எனவும் அவரால் கூறமுடியும். அப்போது அவருக்கு எதிராக எந்த குற்றச்சாட்டுக்களையும் கூறமுடியாது. ஆறு வருடங்களே அரசொன்று இந்த நாட்டில் ஆட்சி செய்ய முடியும். இந்தநாட்டில் இதைச் செய்யமுடியாது. இரண்டு வருட ஆட்சியின் பின் அரசாங்கத்தை பதவியில் இருந்து இறக்கி விடுவார்கள் இதனால் நாட்டு மக்கள் குழப்பமாகி விடுவார்கள். இந்தக் குழப்பங்களை நிறுத்த வேண்டுமானால் அரசியல் யாப்பை மாற்றி அமைக்கவேண்டும். இதை செய்வதற்கு இங்குள்ள சிறிய கட்சிகள் இடங்கொடுக்காது விகிதாசார அடிப்படை முறையினால் இந்த நாட்டில் எந்த ஒரு கட்சியும்பெரிய

கண்டிச்சிங்களவர் ஒப்பந்தத்திலும் காணக் கூடியதாக இருந்தது.

உதாரணமாக மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் முரண்பாடுகளினால் தலதா மாளிகை தியவதன நிலமே தேர்தலின் பொழுது கண்டி உயர்குல சிங்களவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் போயிற்று.

இந்த இரண்டு கட்சிகளையும் இன்று மக்கள் வெறுக்கத் தொடங்கியுள்ளனர். இந்த இரண்டு கட்சிகளின் தலைவர்கள் இந்த நாட்டில் இருக்கும் வரை தேசியப்பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வையும் காண முடியாது .இது இந்த நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பெரும் துர்ப்பாக்கியமாகும் இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையில் கட்சித் தலைமைபீடம் தன்னலம் கருதிச் செயல்படுவதால் எந்தவொரு காரியத்தையும் திறம்படச்செய்வதற்கு இயலாமல் உள்ளது.

ஒன்றரை வருடங்களுக்கு முன்னதாக இந்த நாட்டில் பெரும்பான்மை அரசை கலைத்துவிட்டு சனாதிபதி பொதுத்தேர்தலை நடத்தினார். அத்துடன் ஜே.வி.பி.யுடன் கூட்டு ஒப்பந்தத்தையும் செய்து கொண்டார். இப்பொழுது சுனாமி கூட்டு ஒப்பந்தத்தத்தினால் ஒன்றரை வருடகால ஆட்சி தற்பொழுது பலம் இழந்த ஒருசிறுபான்மை ஆட்சியாக உள்ளது. தனது கட்சியைக் காப்பற்றுசவற்கும், மீண்டும் தாம் சனாதிபதி பதவியில் நீடித்து ஆட்சி நடத்துவதற்கும் சனாதிபதி...ல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக சுனாமி கூட்டு ஒப்பந்தம் பெரும் சிக்கலாக மாறியுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தால் அதன் கௌரவம் இந்த நாட்டு மக்களிடமிருந்தும்,

இப்பொழுது சிறிலங்காவின் அரசியல் நடவடிக்கைகள் யாவும் பெரும் குழப்பங்களுக்குள்ளான இடியப்பச்சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளது. உதாரணமாக சிங்கப்பூரையும், மலேசியாவையும் நாம் எடுத்துக் கொண்டால் அந் நாட்டு அரசியல் நடவடிக்கைகள் யாவும் சனநாயகத்தை தழுவியதான தல்ல,அந்த ஆட்சிகள் தன்னாதிக்கத்தால் நடத்தப்பட்டாலும் நாட்டுமக்களின் நலன்களை கருதி அவர்களின் அபிலாசைகளுக்கு எந்தவொரு அரசியலை நடத்தி மக்களின் செல்வாக்கைப் பெற்றுள்ளன. தற்போதைய நிலையில் நமது நாட்டை முன்

லங்காதீப சிங்கள நாளிதழ்,
ரஞ்சித் ஆனந்த ஜயசிங்க
மொழியாக்கம் அ.சக்திவேல்.

னேற்ற வேண்டுமானால் சில படிப்பினைகளை நாம் இந்தியாவிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

அரசியலை பரிசுத்தப்படுத்துவதற்கு எத்தனையோ மார்க்கங்கள் உண்டு. ஆனால் அவற்றை இவர்கள் முன்னெடுப்பதில் இதுவரை எந்த முயற்சியையும் செய்யவில்லை. நாட்டின் சனநாயகத்தை நாட்டுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும் இன்று மக்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பது மக்களின் நன்மைகளையும், நாட்டின் நன்மைகளையும் பாதுகாக்கவே, அரசியல்வாதிகளும் இதற்கேற்றவாறு நடந்து கெள்ளவேண்டும். அரசியல்வாதிகள் அரசியல் கடன்களை தீர்ப்பதற்கு முன்னதாக திருவிழாவும் முடியப் போகிறது.

# சிங்கள இராணுவத்தினர் சவப்பெட்டிகளில் வீடு திரும்புவதை அனுமதிக்க முடியாது

## -பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

***இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றுகின்ற சிறிலங்கா இராணுவத்தினர் சவப்பெட்டிகளில் வீடு திரும்புவதை தமது அரசு அனுமதிக்காது என்று சிறிலங்கா பிரதி பாதுகாப்புத்துறை அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.***

குருநாகலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைதி முயற்சிகளை முன்னெடுக்கவே எமது அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இருந்தபோதும் சவப்பெட்டிகளில் எமது வீரர்கள் வீடு திரும்புவதை அனுமதிக்க முடியாது. அனைத்துத் தரப்புப் படையினரையும் உசார் நிலையில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. திருகோணமலை நிகழ்வுகளுக்கு அரசு பொறுப்பல்ல. சில தேசத்துரோக சக்திகளே பொறுப்பு என்றார் அவர்.



உருத்திரபுரம் கரடிப்போக்கு பிரதான வீதியின் திருத்த வேலைகள் இடம் பெற்று வருகின்றன. இதன் காரணமாக பேருந்து சேவைகள் உருத்திரபுரத்திற்கு குஞ்சுப் பரந்தன் ஊடாக தற்போது இடம்பெற்று வருகின்றது. (படம்:- சோதி)

# தேவையைப் பொறுத்து ஆயுதத்தைப்பயன்படுத்துக படையினருக்கு முப்படைகளின் தளபதி உத்தரவு

சிங்கள இராணுவத்தினர் தேவைகளைப் பொறுத்து ஆயுதங்களை பயன்படுத்த உத்தரவிட்டுள்ளேன் என்று சிறிலங்கா இராணுவத்தின் முப்படைகளின் தளபதியான நயாசந்தகிரி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியுள்ளதாவது;இராணுவத்தினரை சினமூட்டும் நடவடிக்கைகள் நடைபெறும்போதிலும் அரச பாதுகாப்பு படையின் தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.


இராணுவத்தினர் இனிமேல் தொடர்ந்தும் வீணாக உயிரிழக்க இடமளிக்கப் போவதில்லை. தேவைகளைப் பொறுத்து ஆயுதங்களைப் பயன்படுத்துமாறு நாம் அனைவருக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளோம். சுயபாதுகாப்பிற்காக துப்பாக்கிச் சூடு நடத்துவதை எவராலும் தடுக்க முடியாது. பொலிசிலும் இராணுவத் திலும் உள்ள அனைத்துதர வீரர்களுக்கும் மிக விழிப்புடனும் மிகப் பொறுமையுடனும் கடமையாற்றுமாறு கடந்த வெள்ளிக்கிழமை திருமலைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது தான் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஓகஸ்ட் 11,12-இல் பாராளுமன்றத்தில் பொதுக்கட்டமைப்பு மீது விவாதம்

சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஆழிப்பேரலை மீளளிப்புக்கான பொதுக் கட்டமைப்பு தொடர்பாக ஆகஸ்ட் 11,12 ஆகிய திகதிகளில் விவாதம் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பொதுக்கட்மைப்பு உருவாக்கத்தில் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பிருந்தே பல்வேறு எதிர்க்கட்சியினரும், பாராளுமன்றத்தில் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக விவாதம் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தி வந்தநிலையில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கிளிநொச்சி மாவட்ட இலங்கை மின்சாரசபைக் காரியாலயம் இடவசதிகள் குன்றிய நிலையில் தற்காலிக கட்டடத்தில் தற்போது இயங்கிவருகின்றமையினை படத்தில் காணலாம். (படம்:-சோதி)

## -பிரதமரின் ஆழிப்பேரலை நிவாரண நிதி மோசடி-

# குற்றத்தடுப்புத் திணைக்களத்திடம் ஐ.தே.கட்சி புகார் மனு கையளிப்பு

ஆழிப்பேரலை நிவாரணநிதி மோசடி தொடர்பாக சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி சிறிலங்கா குற்றத்தடுப்பு திணைக் களத்திடம் ஐக்கிய தேசிய கட்சி மனுவை கையளித்துள்ளது.

ஐ.தே.க.சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசீம் இம் மனுவைக் கையளித்தார் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா, காமினி லொக்குகே, மகிந்த விஜயசேகர மற்றும் தயாரத்ன ஆகியோருடன் சென்று இம்மனு கையளிக்கப்பட்டது.

இம் மனுவில் ஆழிப்பேரலை நிவாரணநிதி மோசடி தொடர்பாக மகிந்த ராஜபக்ஷ அவரது செயலாளர் லலித் வீரதுங்க பிரதமர் அலுவலக கணக்காளர் சுபசிங்க ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளன.

ஆழிப்பேரலை நிவாரண நிதியான ரூ.82.9 மில்லியன் ரூபாவை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த வைப்புக் கணக்கிற்கு மாற்றியுள்ளது தொடர்பான விவரங்களும் இம் மனுவில் கையளிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய மகிந்த ராஜபக்ஷ தமது ராஜபக்ஷ வம்சத்தினர் ஊழல் பேர் வழிகள் அல்ல என்றும் முடிந்தால் எம் மீது புகார் மனு கையளியுங்கள் என்றும் சவால் விட்டிருந்தார்.

அந்த சவாலை எதிர்கொள்ளும் முகமாகவே ஐ.தே.க.வினர் நேற்று புகார் மனுவை கையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசியலமைப்பு சபையை மீளமைப்பதன் மூலமே பொலிஸ்துறையை அதிகாரம் வாய்ந்ததாக மாற்றலாம்

## -ஆணைக்குழுத்தலைவர் ரஞ்சித் அபேசூரிய

அரசியலமைப்பு சபைய மீள் அமைப்பதன் மூலமே பொலிஸ்துறை ஆணைக்குழுவை அதிகாரம் வாய்ந்த அமைப்பாக மாற்ற முடியுமென ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய தெரிவித்துள்ளார். இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்து வைத்த பின்னர் கொழும்பில் கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மா நாட்டில் உரையாற்றிய அவர், பொலிஸ்துறை ஆணைக்குழுவின் மீள் அமைப்பின் மூலமே பொலிஸ் துறை ஆணைக்குழுவின் நடவடிக் கைகளை விரைவுப்படுத்த முடியுமென குறிப்பிட்டார்.

தற்போது பொலிஸ்துறை ஆணைக்குழுவுக்கு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்த முடிந்தபோதும் அது தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கமுடியாத நிலை காணப்படுகிறது. பொலிஸ் துறையினரும்,பொலிஸ் துறை ஆணைக்குழுவுக்கு உரிய மதிப்பை வழங்குவதில்லை. அவர்கள் தாமே தனித்தீர்மானங்களை மேற்கொள்

இந்த நிலையில் பொலிஸ் அதிபரும் தமக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லையென ரஞ்சித் அபேசூரிய குற்றம் சுமத்தினார்.

பொலிஸ்மா அதிபரின் ஒத்துழைப்பு தமக்கு உரிய முறையில் கிடைப்பதில்லை. பொலிசாருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தமது அதிகாரிகள் பொலிஸ் மையங்களுக்குச் சென்று விசாரணை நடத்துவதற்கு அனுமதி கேட்டபோதும் அதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இந்த நிலையில் எவ்வாறு தமது பணிகளை பொலிஸ்துறை ஆணைக்குழு மேற்கொள்ள முடியுமென அவர் கேள்வி எழுப்பினார். நாட்டில் மொத்தமாக 35 ஆயிரம் பொலிசார் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள் எனினும் பொலிஸ் ஆணைக்குழுவில் 59 பேர் மாத்திரமே கடமையில் உள்ளதாகவும் ஆணைக் குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய சுட்டிக்காட்டினார். (32)

# திருகோணமலை நகரில் படையினர் வீதித்தடையை அதிகரித்து சோதனை

திருகோணமலை நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக திருமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வாகனங்கள்யாவும் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்வோரின் அடையாள அட்டைகளைப் பரிசீலிக்கும் பணிகளில் படையினர் தனியாகவும் பொலிசார் தனியாகவும் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

ஈருருளிகள், உந்துருளிகள் என்பனவற்றில் பயணிப்போர் மீது உடல் பரிசோதனையும் மேற்கொள்ளப்படுவதாகவும், கடற்படையினர் புதிதாக வீதித்தடைகள் பலவற்றை ஏற்படுத்தி வாகனங்களைச் சோதனையிடும் பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

# பாதிக்கப்பட்ட 32 குடும்பங்களுக்கு மெதடிஸ்த தேவாலயம் உதவி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் கன்னியா பிரதேசத்தில் சுனாமி மற்றும் யுத்தம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்புக்களை இழந்திருக்கும் 32 குடும்பங்களிற்கு மெதடிஸ்த தேவாலயத்தால் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இ ப ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஒவ்வொரு துவிச்சக் கரவண்டி வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன் மாங்காயூற்று கிராம சேவகர் பிரிவில் யுத்தத்தின் போது சேதமடைந்த இரண்டு கிணறுகளை புனரமைப்புச் செய்யும் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக தேவாலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (32)

## கலந்துரையாடல்

(வட்டக்கச்சி)

சாந்தன்முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த 10ஆம் திகதி காலை 10.00 மணியளவில் கிளி/கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தலைவர் தலைமையில் மேற்படி முன்பள்ளியில் இடம் பெற்றது. இதில் முன்பள்ளி சிறார்களுக்கான ஒழுங்குகள் பற்றியும் சிறார்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய சில முக்கிய விடயங்கள் தொடர்பாகவும்,கலந்துரையாடப்பட்டது. கருத்துக்களை பிரதேச அரசியற் துறைப் பொறுப்பாளர் போர்ப் பிரியன், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர், பிரதேச இணைப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர். (12)

# சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதானால் தற்போதைய தலைமையில் மாற்றம் வேண்டும்

## – ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் லால்காந்த

(கொழும்பு)

*சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்குவதாயின் தற்போதைய தலைமையை விட சிறந்த தலைமைத்துவம் ஒன்று ஏற்பட்டாலேயே அது தொடர்பில் சிந்திக்க முடியும் என ஜே. வி. பி பாராளுமன்ற உறுப்பினரான லால்காந்த தெரிவித்துள்ளார்.*

முன்னர் சந்திரிகாவுடன் ஏற்படுத்திய கூட்டணி முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவித்த அவர், புதிய கூட்டணி ஒன்றை அமைப்பது அவசியம் என்றும் அதற்கான தேவை ஒன்று நாட்டில் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

நாட்டில் தற்போது புதிதாக உருவாகியுள்ள பிரச்சினைகளால் சிறந்த கூட்டணி ஒன்று உருவாவது அவசியம் என்றும் அது முன்னரைவிட உறுதியானதாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்ஜே.வி.பி அனைத்து சவால்களையும் ஏற்றுக் கொள்ளும் சக்திவாய்ந்த கட்சியாக உருவாகி வருவதாகவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.தே. கட்சியின் குற்றச்செயல்கள் குறித்து சுவரொட்டி வெளியிட அரசு முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் கறுப்பு ஜூலை போன்று ஏற்பட்ட கொலை, கொள்ளை மற்றும் குற்றச் செயல்களை விளக்கும் சுவரொட்டிகளை வெளியிட சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சம்பவங்கள் மூலமாக ஐ.தே. கட்சியின் உண்மையான முகத்தை சகல மக்களுக்கும் தெரியப்படுத்த முடியும் என்றும் அரசு நம்புவதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# கொழும்பு புளொட் அலுவலகம் அருகே நடமாடிய தமிழ் இளைஞர் கைது

கொழும்பு பம்பலப்பிட்டியிலுள்ள புளொட் அலுவலகத்திற்கு அருகாமையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடியதாக கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு காரைநகர் வாசியொருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுப்பிரமணியம் செந்தில்நாதன் (வயது 29) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# நிஜாம் முத்தலிப் கொலையில் எனது மகனுக்கு தொடர்பில்லை

## - லயனல் பலகல்ல தெரிவிப்பு

சிறிலங்கா இராணுவ புலனாய்வுப்பிரிவு கட்டளையதிகாரி லெப் கேணல் நிஜாம் முத்தலிப் கொலை வழங்கில் தனது மகனுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்று முன்னாள் இராணுவத்தலைமை அதிகாரி லயனல் பலகல்ல கூறியுள்ளார்.

முத்தலிப் கொலை வழக்கில் தொடர்புடையவராகக் கூறப்படும் தேசப்பிரியவின் நெருங்கிய நண்பர்தான் பலகல்லவின் மகன் என்று அண்மையில் செய்திகள் வெளியாகின.

இது தொடர்பாக பலகல்ல கூறுகையில் பொலிஸ் சந்தேக நபரான தேசப்பிரியவின் நண்பர்தான் என் மகன். ஆனால் இந்தக் கொலைக்கும் என் மகனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இது தொடர்பாகபொலிசாரிடம் உரிய விளக்கம் அளித்துவிடுமாறு எனது மகனுக்கு அறிவுறுத்தியுள்ளேன் என்றார் அவர்.

தேசப்பிரிய உள்ளிட்ட ஏழு பேர் இக்கொலை வழங்கில் சந்தேக நபர்களாகச் கருதப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

# புலிகளுடனான யுத்தநிறுத்த ஒப்பந்தம் அரசியலமைப்பை பாதிக்கவில்லை

## – உயர்நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் இலங்கையின் அரசியலமைப்பை பாதிக்கவில்லை என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜே.வி.பியினால் தாக்கல் செய்யப்பட்ட பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான வழக்கு விசாரணையின் போது உயர் நீதிமன்றம் இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்துள்ளதாக ஐ.தே.க. கூறுகின்றது

சனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பின் நான்கு சரத்துக்களுக்கு இடைக்கால தடை உத்தரவைப்பிறப்பித்துள்ள உயர் நீதிமன்றம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் இலங்கையின் அரசியலமைப்பை மீறவில்லை என்று குறிப்பிட்டுள்ளமை ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் செல்வாக்கை அதி கரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# தரமான தூக்குக் கயிற்றை சிபார்சு செய்ய சிறைச்சாலை ஆணையாளரால் குழு அமைப்பு

(கொழும்பு)

தரமான தூக்குக் கயிற்றை சிபார்சுசெய்ய குழு ஒன்றை சிறிலங்காவின்சிறைச்சாலை ஆணையாளர் நியமித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து இரண்டுவிதமான தூக்குக் கயிறுகளையும் உள்ளூர் நிறுவனம் ஒன்றிலிருந்து ஒரு தூக்குக் கயிற்றையும் தருவித்துள்ள சிறைச்சாலை ஆணையாளர் இவற்றில் சிறந்ததை தெரிவுசெய்யவே இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

சிறிலங்கா நீதிமன்றங்களில் மரண தண்டனை தீர்ப்புக்கள் வழங்கப்பட்டு வருவதையடுத்து சிறைச்சாலை ஆணையாளர் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

# இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலாக முஸ்லிம்கள் ஒரு போதும் விளங்கவில்லை

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

முஸ்லிம்கள் இலங்கையின் இறைமைக்கு ஒரு போதும் அச்சுறுத்தலாக விளங்கவில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கை நியாயமானது என்றும் அதனை தமதுஅரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

# ஐ.தே. கட்சி பா. உறுப்பினர் மீது முத்தலிப் கொலை குறித்து விசாரணை

(கொழும்பு)

லேப். கேணல் முத்தலிப் கொலைச் சம்பவம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றஉறுப்பினர் ஒருவர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு `பிரிவு கட்டளை அதிகாரியான லெப்ரினன்ட் கேணல் முத்தலிப் படுகொலையுடன் தொடர்புடையதான சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சி பிரதித் தலைவரின் கடிதத் தலைப்புக்களைத் தனது நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியதாக குற்றத்தடுப்புப் புலனாய்வுப்பிரிவு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# ஐ.ம.சு முன்னணியின் புதிய செயலராக விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்படலாம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய செயலராக பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் வெளியேறலின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பலம் குறைந்துள்ளது. இந்த நிலையில் செயலராக பதவி வகித்த அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த அந்தப் பதவியில் இருந்து விலக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இது குறித்து ஆளும் கட்சி எவ்வித உத்தியோகபூர்வ அறிக்கையையும் இதுவரை வெளியிடவில்லை. (32)

# சனாதிபதித்தேர்தல் குறித்து ஆணையாளர் தமது நிலைப்பாட்டை விரைவில் வெளியிடுவார்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் தொடர்பில் விரைவில் தேர்தல் ஆணையாளர் தமது நிலைப்பாட்டை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே சனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது குறித்து ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் பாரிய வாக்குவாத நிலைதோன்றியுள்ளது. இதற்கு காரணம் 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பும் அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 27 ஆம் சரத்தின் சீர்திருத்தமுமே. எனவே இந்த இரண்டு அரசியலமைப்புக்களையும் பரிசீலன்னை செய்துவரும் தேர்தல் ஆணையாளர் அண்மையில் சட்டமா அதிபரையும் இது தொடர்பில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். (32)

# நுரைச்சோலை, மேல்கொத்மலை மின்திட்டத்தைத் துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நுரைச்சோலை மற்றும் மேல் கொத்மலை மின் திட்டங்களைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சு தெரிவித்த தகவலின் அடிப்படையில் மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நுரைச்சோலை மின் உற்பத்தி பற்றிய சாத்திய ஆய்வறிக்கை அடுத்த வாரம் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# கொழும்பில் இரு துப்பாக்கிச் சூடு; மூன்று பேர் படுகாயம்

கொழும்பில் கடந்ததிங்கட்கிழமை நடந்த இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் மூவர் காயமடைந்துள்ளனர்.கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் 155 ஆம் தோட்டத்தில் பகல் 12.30 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூடடில் இருவர் கயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.மூன்று ஆயுததாரிகள் நடத்திய இத்துப்பாக்கிச்சூட்டில் கந்தகுமார் (வயது-24) என்பவரும் ராஜ்குமார் (வயது-25) என்பவரும் காயமடைந்துள்ளனர். காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் இருவரில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. கிராண்ட் பாஸ் பகுதியில் காலை நடந்த துப்பாக்கிச் சூட்டில் விசாட் எனும் இளைஞர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இவர் மீது துப்பாக் கிச் சூட்டினை நடத்தியவர்கள் யாரென இதுவரை கண்டறியப்படவில்லை.

## – கொழும்பு– மாத்தறை இடையிலான –

# அதிவேக புகையிரதப் பாதை அமைக்க இந்தியா உதவியளிக்கும்

கொழும்பிற்கும் மாத்தறைக்கும் இடையிலான அதிவேகப் புகையிரத பாதையை அமைப்பது தொடர்பில் சிறிலங்கா அரசாங்கத்தால் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளுக்கு இந்தியா சாதகமான பதில் ஒன்றை அறிவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் வேண்டுகோள் குறித்து இந்திய மத்திய அமைச்சரவை ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் இது தொடர்பான தனது நிலைப்பாட்டை இந்தியா அறிவிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை காரணமாக கொழும்பிற்கும் மாத்தறைக்கும் இடையிலான புகையிரதப் பாதை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

# இந்தியா-அமெரிக்கா உறவில் திருப்புமுனை;

# பொக்ரான் சோதனையால் விதித்த தடைகள் நீக்கம்

(வோஷிங்டன்)

கடந்த 1974 ஆம்ஆண்டு நடத்திய பொக்ரான் அணுகுண்டு சோதனை காரணமாக இந்தியா மீது விதித்த தடைகளை அமெரிக்கா நீக்கியது. இதன் மூலம், அணுமின் உற்பத்திக்கு தேவையான அணு உலைகளைச் சர்வதேச நாடுகளில் இருந்து வாங்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது , 1974 ஆம் ஆண்டு பொக்ரானில் முதல் அணுகுண்டு சோதனையை இந்தியா நடத்தியது. ஆத்திர மடைந்த அமெரிக்கா, இந்தியா மீது பொருளாதார தடை விதித்தது. அணு சம்பந்தப்பட்ட எந்த உதவியையும் இந்தியாவுக்கு வழங்கக் கூடாது என்றும் தடை விதித்தது.

அமெரிக்காவுக்கு மூன்று நாள் பயணமாக சென்றுள்ள பிரமர் மன்மோகனசிங், அதிபர் புஷ்சுடன் பேச்சு நடத்தினார். அப்போது, இந்தியா மீது விதித்த இத்தடைகளை நீக்குவதாக புஷ் அறிவித்தார்.

மேலும், தாராபூர் அணு மின் நிலையத்துக்குத் தேவையான எரி பொருளை விநியோகம் செய்வதாகவும் கூறினார்.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் இரு தலைவர்களும் கையெழுத்திட்டனர்.இதன் மூலம், இந்தியாவை அணு ஆயுத நாடாக அமெரிக்கா மறைமுகமாக அங்கீகரித்துள்ளது. தடை நீக்கப்பட்டால், நாட்டின் அணு மின்சக்திக்குத் தேவையான அணு உலைகளை சர்வதேச சந்தையில் இருந்து இந்தியா இனிப்பிரச்சினையின்றி வாங்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்களாவன. மக்கள் பயன்பெறும் அணுசக்தி திட்டங்களில் இந்தியாவுக்கு அமெரிக்கா முழு ஒத்துழைப்பு அளிக்கும்.

அணுமின் சக்தி மற்றும் வர்த்தகத்துறைகளில் இந்தியாவுடன் முழு ஒத்துழைப்புடன்செயற்படும் வகையில், அமெரிக்காவின் சட்டங்களும், கொள்கைகளும் மாற்றி அமைகக்கப்படும்.

தாராபூர் அணுமின் நிலையத்துக்குத் தேவையான எரிபொருளை அமெரிக்கா விநியோகம் செய்யும். அணுமின் சக்தித்துறையில் இந்தியாவுடன் இணைந்து செயற்படுபடி நட்பு நாடுகளையும் அமெரிக்கா கேட்டுக்கொள்ளும்.இவ்வாறு ஒப்பந்தத்தில் பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

## பேய் விரட்டினால் ஐந்து வருட சிறை

(புதுடில்லி)

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில்பேய்விரட்டினால் ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில்முதல் மந்திரி ரமண்சிங்க தலைமையிலான பாரதிய ஜனதா ஆட்சி நடந்து வருகிறது. அங்கு பில்லிசூனியம், மாந்திரீகம் பேய் விரட்டுதல் என்ற பெயரில் பெண்கள் கொடுமைப் படுத்தப் படுவதைத்தடுக்க சட்டம் கொண்டு வரப்படுகிறது.

இந்தச் சட்டத்தின்படி சூனியம், மாந்திரீகம்ஆகியவற்றில் ஈடுபடுவது பிணையில் வர முடியாத குற்றமாகக் கருதப்படும். இதில் ஈடுபடுபவர்களை உத்தரவு இல்லாமல் பொலிசார் கைது செய்யலாம்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஐந்தாண்டு சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். பேய் பிடித்ததைக் குணப்படுத்துவதாக சொல்லிக் கொள்ளும் மந்திரவாதிகள், பெண்ணுக்கு பேய் பிடித்து இருப்பதாகக் கூறி அவர்களை துன்புறுத்துபவர்கள் ஆகியோருக்கும் இந்தச் சட்டத்தின் கீழ் தண்டனை கிடைக்கும்.

# அணுவாயுத பரவல் தடுப்பு கொள்கையில் இந்தியா எப்போதும் உறுதியாக உள்ளது

## -அமெரிக்காவில் இந்தியப் பிரதமர் உரை


(வோஷிங்டன்)

அணுவாயுத பரவல் தடுப்புக் கொள்கையில் இந்தியா எப்போதும் உறுதியாக இருந்து வருகிறது. அணு சக்தியை ஆக்க பூர்வ பணிகளுக்கு பயன்படுத்துவதையே விரும்புகின்றோம். எங்கள் அண்டை நாட்டின் அணுசக்தி கொள்கையால் எங்கள் நாட்டின் பாதுகாப்பு பாதிக்கப்படுகிறது. என இந்தியப் பிரதமர் மன் மோகன்சிங் தெரிவித்துள்ளார். அமெரிக்கா சென்றுள்ள அவர் அமெரிக்க பாராளுமன்ற கூட்டத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அணுசக்தியை எரி சக்தியாகப் பயன்படுத்துவதில் அமெரிக்காவுடன் இந்தியாஇணைந்து செயற்படும் நிலக்கரி மூலமும், நீர் மூலமும் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களிலும், இணைந்து செயற்படுவோம்.

சர்வதேச சந்தையில் இருந்து ஆறு அணு உலைகளை இந்தியா வாங்கும் இதன் மூலம் இந்தியா தனது எரிசக்தித் தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் இந்தியாவைப் பொறுப்புள்ள அணு ஆயுத நாடாக அமெரிக்கா ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவிக்கின்றேன். தாராபூர் அணு தொழிற்சாலைக்கு அணு உலைகளை அமெரிக்கா வழங்க சம்மதம் தெரிவித்ததை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றேன்.

தீவிரவாதத்தை எதிர்த்து செயற்பட இந்தியா ஒரு போதும் தயங்காது தீவிரவாதத்தை எதிர்ப்பதில் அமெரிக்காவுடன் இந்தியா இணைந்து செயற்படும். சனநாயகத்திற்கு ஆபத்தை தீவிரவாதம் எங்கு ஏற்படுத்தினாலும், அதை அழிக்க வேண்டும் என்பதில் தீவிரவாதத்தை ஒழிப்பதில் ஒரே அணுகுமுறை தான் இருக்க வேண்டும் பாகுபாடு கூடாது எனவும் அவர் தெரிவித்தார்.



## இரண்டு தற்கொலைத் தீவிரவாதிகள் அயோத்தியில் தாக்குதல் நடத்தத் திட்டமாம்

அயாத்தியில் பதுங்கி இருக்கும் இரண்டு தற்கொலை தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அயோத்தி ராமர் கோவிலை தகர்க்க கடந்த ஐந்தாம் திகதி லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் முறியடிக்கப்பட்டது.

அடுத்த தாக்குதலுக்காக தற்கொலை படை தீவிரவாதிகளில் இருந்து இரண்டு இளைஞர்கள் தேர்தெடுக்கப்பட்டு அயோத்திக்கு அனுப்பப்பட்டு உள்ளதாக தெரியவந்துள்ளது. அந்தஇரண்டு தீவிரவாதிகளும் 30வயதுக் குட்பட்டவர்கள் பார்ப்பதற்கு மிக சாதாரணமாக இருப்பார்கள் என்று தெரிகிறது. என பொலிசார் தெரிவித்துள்ளனர். அடையாளம் காண முடியாத அவர்கள் அயோத்தியைச் சுற்றியுள்ளமாவட்டங்களில் பதுங்கி இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.இதனால் சகரன் பூர்.மீரட், பக்பட், முசாபர் நகர், காசியாபாத்,நொய்டா நகரங்களில் அதிரடி சோதனைகள் நடந்து வருகிறது.

அயோத்தி அருகே தங்கி இருக்கும் தற்கொலை படைத் தீவிரவாதிகளின் ரகசிய உரையாடலை பொலிசார் இடைமறித்து கேட்டனர். அவர்களது வயர்லஸ் பேச்சு கையடக்கத் தொலைபேசி உரையாடல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்மூலம் இரண்டு தீவிரவாதிகளும் அயோத்தியில் அதிகமான பக்தர்கள் திரளும் திருவிழா நாளில் தாக்குதல் நடத்தத் திட்டம் தீட்டி இருப் பது கண்டு பிடிக்கப்பட்டது.

எனவே அயோத்தி ராமர் கோவிலுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## அயோத்தி தாக்குதல் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு மனு

(புதுடில்லி)

அயோத்தி ராமர் கோவில் தாக்குதல் பற்றி சி.பி.ஐ.விசாரணை நடத்த வேண்டும் என்று சனாதிபதி அப்துல் கலாமிடம் விசுவ இந்து பரிஷத் மனு கொடுத்துள்ளது.

விசுவ இந்து பரிஷத்தின்தலைவர் அசோக் சிங்கால் தலைமையில் இந்து மத சாமியார்கள் குழு டில்லியில் சனாதிபதி அப்துல்கலாமைச் சந்தித்து மனு கொடுத்தது. அயோத்தி ராமர் கோவில் உட்பட அனைத்து வழிபாட்டு தலங்களுக்கும் பாதுகாப்பு கொடுப்பதுடன் அயோத்தி ராமர் கோவில் தாக்குதல்பற்றி சி.பி.ஐ விசாரணை நடத்த வேண்டுமென்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

சனாதிபதியைச் சந்தித்து மனு கொடுத்த பின்னர் சனாதிபதி மாளிகைக்கு வெளியே நிருபர்களுக்கு விசுவ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால் பேட்டி வழங்கினார்.

## அத்வானிக்கு எதிராகப் போர்க்கொடி; மதன்லால் குரானா மீது ஒழுங்கு நடவடிக்கை

அத்வானிக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய மதன் லால் குரானாமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பா.ஜனதா கட்சி முடிவு செய்துள்ளது.

பா.ஜனதாக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரகாஷ்ஜாவ் தேகர் புதுடில்லியில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;

தனதுபாகிஸ்தான் பயணத்தின் போது, ஜின்னாவைப் பாராட்டி பேசிய பா.ஜனதாக்கட்சி தலைவர் அத்வானி, தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று பகிரங்கமாக மதன்லால் குரானா போர்க்கொடி தூக்கினார். குரானாவின்இந்த பகிரங்க கோரிக்கையால் மட்டும் கட்சித்தலைவர் அத்வானி மனம் உடையவில்லை. அத்வானியின் தலைமையின் கீழ்தன்னால் பணியாற்ற முடியாது என்றும் குரானா கூறியிருப்பது தான் அத்வானியை மிகவும் புண்படுத்திவிட்டது.

இதனால் மதன்லால் குரானா மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கட்சி முடிவு செய்துள்ளது. அதற்கான முறையான அறிவிப்பை கட்சித்தலைவர் வெளியிடுவார் எனத் தெரிவித்தார்.

## 178 ஆம் நாள் நினைவஞ்சலி...



| | பிறந்த திகதி | இறப்பு |
|---|---|---|
| உதயராசா விஜயலம்மா | 11.01.1959 | 26.12.2004 |
| உதயராசா டினார்தனி | 27.02.1991 | 26.12.2004 |
| உதயராசா கஜேந்தினி | 27.12.1992 | 26.12.2004 |
| உதயராசா துஷானா | 05.07.1998 | 26.12.2004 |

*ஏழு மாதம் சென்றாலும் ஓயாத நினைவலைகளின் நினைவுகளில் மீள முடியாமல் தவித்து துயரக் கடலில் மூழ்கி உங்கள் இன்முகத்தை என்றும் மறவா நிற்கும் உங்கள் உடன்பிறப்புக்கள்.*

*26. 12. 2004 அன்று கடல் கொந்தளிப்பின் போதுசாவடைந்துள்ளார்கள். இவர்களின் அந்தியேட்டி நிகழ்வு21. 07. 2005 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற இருக்கின்றது. இவர்களின் துயரச்செய்தியறிந்து எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இம்மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.*


*தகவல்: குடும்பத்தினர்.*

*முள்ளிவாய்க்கால் மேற்கு,முல்லைத்தீவு*

(6375)

# தனிப்பட்ட அழுத்தம் காரணமாக விரைவில் ஓய்வுபெற முடிவு

## அவுஸ். நட்சத்திரப் பந்துவீச்சாளர் வோர்ன்



"எனது தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக என்னால் கிரிக்கெட் விளையாட்டில் கவனம் செலுத்த முடியாத அளவுக்குச் செல்கின்றன. இதனால் நான் விரைவில் கிரிக்கெடடில் இருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது." இவ்வாறு அவுஸ்திரேலிய அணியில் நட்சத்திர பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது, "நான் மிகுந்த கவலையுடன் இருக்கிறேன். எனது தனிப்பட்ட பிரச்சினைகள் என்னை கிரிக்கெட் விளையாட்டில் கவனம் செலுத்த முடியாத அளவுக்கு செய்கின்றன" என்று கூறியிருக்கிறார்.

எனக்கு தொடர்ந்து பல பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த சமுதாயம் நம் மீது எதை வேண்டுமானாலும் சொல்கிறது. ஆனாலும் இந்த சமுதாயத்துக்குள்தான் நாம் வாழவேண்டிய கட்டாய நிலை இருக்கிறது. என்னை ஒரு மோசமான மனிதனாக சித்தரித்து விட்டார்கள்.

எனது தனிப்பட்ட வாழ்க்கையில் நான் நிம்மதி இல்லாமல் தவிக்கிறேன். இது எனது கிரிக்கெட் விளையாட்டு வாழ்க்கையையும் பாதிக்கிறது. எனவே என்னால் நீண்ட நாள் கிரிக்கெட் விளையாட முடியாது. அதனால், விரைவில் வெளியேறி விடுவேன். ஆனால் எப்போது ஓய்வு பெறுவேன் என்பதை திட்டவட்டமாக சொல்ல முடியாது.2006-2007 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஆஷஸ் தொடர் போட்டியில் நான் பங்கேற்பேனா என்பதை சொல்ல முடியாது. ஆனால் 2007 இல் மேற்கிந்தியத்தீவில் நடைபெறும் உலக கோப்பை போட்டிக்கு நான் இருக்கமாட்டேன்.

# அவுஸ்திரேலிய வீரர்கள் அகங்காரம் கொண்டவர்கள்



## பீற்றர்சன்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் அகங்காரம் மிக்கவர்கள் என இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இன்று லோர்ட்ஸ் மைதானத்தில் இரு அணிகளுக்குமிடையிலான ஆஷஸ் கிண்ணத்துக்கான முதலாவது டெஸ்ட் போட்டி நடைபெறும் நிலையில் இவ்வாறு பீற்றர்சன் தெரிவித்துள்ளார். .அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது, ஆவுஸ் வீரர்கள் ஆக்ரோஷமாகப் போட்டியிட்டு தொடரை வெல்ல எண்ணியிருப்பதாக தான் கருதுவதாகத் தெரிவித்ததுடன், அண்மையில் நடைபெற்ற கடைசி இருஒருநாள் போட்டிகளில அவர்கள் எவ்வாறு விளையாடினார்கள் என்பதைத்தெளிவாக தெரிந்து கொண்டதாகவும் தாம் அவர்களை வெல்லமுடியும் என்று கூற முடியாது என்றும் தெரிவித்துள்ளார். அண்மையில் மெக்ராத் இவரைப் பற்றி கருத்துத் தெரிவித்ததற்கு பதிலடி கொடுக்கும் முகமாகவே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது வரைஒரு நாள் போட்டிகளில் ஆடிவந்த பீற்றர்சன்னுக்கு இதுமுதலாவது டெஸ்ட்தொடராகும்

தென்னாபிரிக்காவில் பிறந்தவரான பீற்றர்சன் அண்மையில் அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சாளர் ஷேன்வோர்னுடன் ஒரே கவுண்டி அணியில் பங்கேற்றார். எனினும் இத்தொடரில் வோர்ன் தன்னை வெளியேற்றலாம். அவரை தன்னால் வெளியேற்ற முடியாது என்றும் தெரிவித்தார்.




-அவுஸ்.இங்கிலாந்து அணிகளுக்கிடையில்-

# ஆஷஸ் டெஸ்ட் தொடர் லோர்ட்ஸில் இன்று ஆரம்பம்!





அவுஸ்திரேலிய இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதற் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது.

உலகெங்கும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் அதிகம் ஆர்வத்துடன் எதிர்பார்க்கும் போட்டிகளில் அவுஸ்திரேலிய-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரும் ஒன்று இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இந்தத்தொடர் இங்கிலாந்தில் இன்று ஆரம்பமாகின்றது. ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

கிரிக்கெட் ரசிகர்கள் பார்வை எல்லாம் இப்போது லண்டன் லோர்ட்ஸ்சை நோக்கியே உள்ளது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கடைசியாக நடந்த எட்டு ஆஷஸ் தொடரையும் அவுஸ்திரேலிய அணியே கைப்பற்றியிருந்தது. ஆனால் இம்முறை நிலைமை அவ்வளவு சாதகமாக இல்லை. கடந்த காலங்களை விட இங்கிலாந்து இப்போது பலத்துடன் களமிறங்குகிறது.

மைக்கல்வோன் தலைமையிலான இங்கிலாந்து அணியில் மார்கஸ் ரெஸ்கொதிக், அன்ரு பிளின்டொப், 'புதிய அறிமுகம்' கெவின் பீற்றர்சன் என்று ஒரு பட்டாளமே காத்திருக்கிறது. ஆகவே அவுஸ்திரேலிய தரப்பு இம்முறை மிகக் கடினமாகப்போராட வேண்டியிருக்கும்.

அத்துடன் அவுஸ்திரேலிய அணியில் மெக்ராத், ஷேன் வோர்ன் இருவரும் அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றனர். 500 விக்கெட் சாதனைக்கு மெக்ராத் இன்னும் ஒரேயொரு விக்கெட் எடுக்கவேண்டும். யார் அந்த இலக்கு என இருதரப்புமே எதிர்பார்க்கின்றது. டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 விக்கெட் சாதனைக்கு வோர்ன் இன்னும் 13 விக்கெட்டை வீழ்த்தவேண்டும். எனவே இருவரும் தங்கள் முழு திறமையையும் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




மூன்று நாடுகள் பங்குகொள்ளும் கிரிக்கெட் போட்டித் தொடருக்கு இந்திய அணித்தலைவராக ராவிட் அறிவிக்கப் பட்டுள்ளார். கங்குலிக்குத் தடை நீக்கப்பட்டாலும் ராவிட்டின் தலைமையில்தான் அவர் விளையாடுவார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரது ரசிகர்கள் கொல்கத்தாவில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். தடைநீக்கப்பட்டால் கங்குலியை உடனே தலைவராக்க வேண்டும் என்று அவர்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

# கலிபோனியா டெனிஸ் தொடர் செரீனா வில்லியம்ஸ் விலகல்

அடுத்த வாரம் கலிபோனியாவில் நடைபெறவுள்ளடெனிஸ் தொடரில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் பங்கேற்க முடியாதுள்ளார். அவரது கணுக்காலில் ஏற்பட்ட காயமே அதற்குக் காரணமாகும்.

இவர் இரண்டு மாதங்களுக்கு முன் அமெலியாதீவில் நடைபெற்ற காலிறுதிப்போட்டியின்போது காயப்பட்டார். இவர் அண்மையில் நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் மூன்றாவது சுற்றிலும் பிரான்ஸ் ஓபன்தொடரிலும் பங்குபற்றி தோல்விகண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இவரது சகோதரியான வீனஸ் வில்லியம்ஸ், கிம்கிளிஜர்ஸ்டர்ஸ்,டெவன்போர்ட் ஆகியோர் இத்தொடரில் பங்கேற்கின்றனர்.





முல்லை உப்புமாவெளி இடைத்தங்கல் முகாமில் அண்மையில் விளையாட்டு மைதானத் திறப்புவிழா இடம்பெற்றது. இதில் மைதானப் பெயர்ப்பலகையினை கே. சிவனடியார் திரைநீக்கம் செய்வதை முதலாவது படத்திலும், விளையாட்டு உபகரணங்களை முல்லை உதைபந்தாட்டமத்தியஸ்தர் வின்சன் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள் : குகன்)

# வீரர்களின் தெரிவு குறித்து சப்பல் திருப்தி



அணியில் வீரர்கள் தேர்வு எனக்கு முழு திருப்தியை அளிக்கிறது. தேர்வுக் குழுவினர் தங்களது பணியை சிறப்பாக செய்து முடித்துள்ளனர். நாங்கள். நடத்திய பயிற்சி முகாம் சிறந்த வீரர்களை அடையாளம் காட்டும் விதமாக அமைந்துள் ளது என இந்திய அணியின் பயிற்சியாளர் சப்பல் கருத்துத் தெரிவித்துள்ளார். இலங்கையில் நடைபெறும் மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்கள் தேர்வு குறித்து கருத்துக் கேட்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது அவர் கூறியதாகவது;முழுமையான திறன் படைத்த அணியாக இந்திய அணியுள்ளது. இலங்கை போட்டிக்கு முன்னதாக தொடர்ந்து சில போட்டிகளில் விளையாடுவார்கள். இதன் மூலம் மேலும் திறமை அதிகரிக்கும். இவ்வாறு கிரேக் சப்பல் கூறினார்.



உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தினின் ஏற்பாட்டில் மேற்படி கழக விளையாட்டு மைதானத்தை சீர்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதனைப் படத்தில் காணலாம். (படம்:-சோதி)

# மார்லன் டெவனிஸ் தகுதி



கடந்த திங்களன்று சுவீடனில் நடைபெற்ற உலகக்கிண்ணத்துக்கான தகுதிகாண் 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பிரிட்டனைச் சேர்ந்த மார்லன் டெவனிஸ் தகுதி பெற்றுள்ளார்.


ஒலிம்பிக்கில் அஞ்சலோட்டப் போட்டியில் தங்கம் வென்ற இவர் 200 மீற்றர் தூரத்தை 20:55 செக்கன்களில் ஓடி இரண்டாமிடத்தைப் பெற்றார்.

இவருக்கு அடுத்ததாக வந்த கிறிஸ்ரியன் மல்கம் 20:59 செக்கன்களை எடுத்துக்கொண்டார். டெவனிஸ் குறிப்பிடும்போது இனிவரும் காலங்களில் இந்தத் திறமையை இருமடங்காக்க முயற்சித்திருப்பதாகக் கூறினார்.

# கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் புதுக்குடியிருப்பில் நாளை ஆரம்பம்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுவிழாவின் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட்போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட்போட்டி நாளை முதல் ஆரம்பமாகி, மூன்று நாட்கள் தொடர்ந்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என ஏற்பட்டாளர்கள் தெரிந்துள்ளனர்.



## சிந்தனைக்கு

*வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்*

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 21.07.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## ஓரளவேனும்...!

சிறிலங்காவிற்கு உதவிவழங்கும் முன்னணி நாடுகளான அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் தங்கள் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், அமெரிக்கத் தூதரகம் இலங்கையின் இன்றைய நிலவரம் தொடர்பாக காட்டமான, ஒரு வகையில் எச்சரிக்கையை விடுக்கும் வகையிலான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. யுத்தநிறுத்த உடன்பாடு, இலங்கையில் நடைபெறும் நிழல்யுத்தம், சமாதானப் பேச்சு வார்த்தைகள், சர்வதேச நிதியுதவி போன்றவை தொடர்பான விடயங்கள் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கையை இருதரப்பும் கடைப்பிடிக்காது போனால், பாரிய எதிர் விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என எச்சரித்துள்ள இவ் அறிக்கை, இரு தரப்பினரும் மேற்கொள்ளும் கொலைகள் நிறுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது. இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா இத்தகைய அறிக்கைகளை இடைக்கிடைவிட்டுக்கொண்டாலும் இம்முறை அமெரிக்காவின் அறிக்கை சற்றுஆழமானதாகவும், யுத்தநிறுத்த விடயத்தில் அது தீவிர அக்கறை கொண்டுள்ளதோடு தவறு எங்குள்ளது என்பதைப் புரிந்துகொண்டுள்ளது போன்றும் உள்ளது.

இம்முறை அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிவிப்பில் சுட்டிக் காட்டியுள்ள சில விடயங்கள், அரசாங்கத்திற்கு சில அசௌகரியங்களை ஏற்படுத்தலாம், குறிப்பாகத் துணைப்படைகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்பதும், விடுதலைப் புலிகளின் போக்குவரத்திற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதும் முக்கியமானவையாகும்.

சிறிலங்கா ஆயுதப்படைகளுடன் சேர்ந்து அன்றி அவற்றின் பாதுகாப்புடன் துணைப்படை என்ற பெயரில் இயங்கும் தமிழ்த் தேசவிரோதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பது புரிந்துணர்வு உடன்பாட்டின் முக்கிய விதிகளில் ஒன்று. ஆனால் அரசாங்கமோ யுத்தநிறுத்தம் அமுல் செய்யப்பட்டு மூன்றரை ஆண்டுகளாகியும் அதனை அமுல்படுத்தவில்லை.

யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி, ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும் தமிழ் இனவிரோதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு, இக்குழுக்களை வடக்குக் கிழக்கிற்கு வெளியில் அரசாங்கம் அப்புறப்படுத்தியும் இருத்தல் வேண்டும்.

ஆனால் அரசாங்கம் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. இதன் மூலம் யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிகளுக்கு உட்பட்ட விதத்தில் அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை என்பது மட்டுமல்ல,இத் துணை இராணுவக் குழுக்களிடம் ஏன் ஆயுதங்கள் களையப்பட வேண்டும், அவர்கள் ஏன் வெளியேற்றப்பட வேண்டும் என உடன்பாட்டு விதி அமைக்கப்பட்டதோ இதனை நிருபிப்பது போன்றே நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது எனலாம்.

அதாவது தமிழ்த் துணைப்படை என்ற பெயரில் இயங்கும் இத்தேசவிரோதக் 'குழுக்கள் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் ஆபத்தை விளைவிப்பவர்கள் என்பதன் அடிப்படையிலேயே இவர்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற விதி சேர்க்கப்பட்டது. ஆனால், விதியின்படி அரசாங்கம் செயற்படாததினால் இன்று இத்தேச விரோதக் குழுக்களினால் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கே ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

அடுத்ததாக நிராயுதபாணிகளாக [illegible]ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு[illegible] அரசியல் பணிக்குச் செல்லும் போராளிகளுக்கும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கூடாகப் பயணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பே பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய கடப்பாடுள்ளது. ஆனால் அரசாங்கம், புலிகள் மீதான தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனக் கூறிக்கொள்வதன் மூலம் தனது பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது.

இது அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெளிவாகவே சுட்டிகாட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவின் அறிக்கைகளின்படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதலானது போர்நிறுத்த உடன்பாட்டின் நடுத்தூணைத் தாக்குதற்கு ஒப்பானதாகும். அதாவது இத்தாக்குதல்கள் போர்நிறுத்த உடன்பாட்டையே தகர்த்துவிடும் என அமெரிக்கா உணர்ந்துள்ளது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் அமெரிக்கத் தரப்பு ஓரளவேனும் யுத்தநிறுத்த உடன்பாடு எதனால் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது என்பதைப் புரிந்துகொண்டுள்ளது என்றே கருதக் கூடியதாகவுள்ளது. இந்நிலையானது இனப்பிரச்சினை விடயத்தில் ஓரளவாயினும் அமெரிக்கா நியாயப்பாட்டுடன் வந்துள்ளமை வரவேற்கத்தக்கது. அதாவது தமிழர் தரப்பு விடயத்தில் ஓரளளவேனும் அமெரிக்கா புரிந்து கொண்டுள்ளமை தமிழ்மக்கள் தரப்பிற்குச் சற்றுத் திருப்தியளிப்பதாகவுள்ளது.

# எஸ்.பி. விடுவிக்கப்பட்டுள்ள விடயத்தில் இறுதியாக நீதி கிடைத்திருப்பது மகிழ்ச்சியே

### ஐ.தே.கட்சி பேச்சாளர் கருத்து

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ். பி திசாநாயக்கவிற்கு எதிரான அளவிற்கதிகமாக சொத்துச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டில் இருந்து அவர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத் தியுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்து தெரிவிக்கையில்

முன்னாள் அமைச்சர் எஸ்.பி திசாநாயக்கவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட இந்தக் குற்றச் சாட்டில் எந்த விதமான அடிப்படைக்காரணங்களும் இல்லை.இது அவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த எடுக்கப்பட்ட விடயம்.எப்படியிருந்த பொழுதிலும் இறுதியாக நீதி கிடைத்திருப்பது தொடர்பாக எமது கட்சி மகிழ்ச்சியடைந் துள்ளது என்றார்

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க தற்சமயம் இரண்டு வருட கால கடூழிய சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (32)

# அடிப்படை மனித உரிமைகளை மீறாது சந்தேக நபர்களை விசாரணை செய்கிறோம்

### *சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் கூறுகின்றார்*

சிறிலங்காவில் அதிகரித்து வரும் பொலிஸ் சித்திரவதைகள் மற்றும் பொலஸ்நிலைய மரணங்கள் குறித்து தேசிய பொலிசார் ஆணையம் எழுப்பியிருந்த குற்றச்சாட்டுகள் குறித்து சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ விளக்கம் அளித்துள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது;

அப்பாவி மக்கள் மீது சில பொலிஸ் அதிகாரிகள் மேற்கொள்ளும் தாக்குதல் மற்றும் சித்திரவதை போன்ற நடவடிக்கைகளை முழுமையாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கைகளை எடுக்க நான் எப்போதுமே பின்நிற்கப்போவதில்லை.

அடிப்படை மனித உரிமைகளை மீறி சந்தேக நபர்களைத் தாக்கி சித்திரவதை செய்து அவர்களிடமிருந்து தகவல்களைப் பெறும் முறையை நிறுத்தி குற்றவாளிகளிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்கு நவீன முறைகளைப் பயன்படுத்த வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளது.

லெப்.கேணல் முத்தலிப், ஊடகவியலாளர் சிவராம், மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய, மாகாணசபை உறுப்பினர் நாமல் குணவர்த்தன ஆகியோரின் கொலைகளுடன் சம்பந்தப்பட்ட பல முக்கிய தகவல்களை அது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மீது எவ்வித சித்திரவதையும் மேற்கொள்ளப்படாமலேயே பெற்றுக் கொள்ளப்பட்டது.

இது சம்பந்தமான விசாரணைகளின்போது சந்தேகநபர்களிடம் நவீன தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தி புதியமுறையில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த முறைகளை எதிர்காலத்திலும் கடைபிடிக்க வேண்டும் அப்படிச் செய்கையில் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களைக் குறைக்க முடியும்.

# பதுளை தோட்டக்காணிகளை சுவீகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை!

(கொழும்பு)

பதுளை இங்குருகம தோட்டக் காணியை சுவீகரிப்பதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவை விதித்துள்ளது.

குறிப்பிட்ட தோட்டத்தின் தொழிலாளர்கள் தாக்கல் செய்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதிகள் காணியை சுவீகரிப்பதற்கான முயற்சிக்கு எதிராக இடைக் காலத் தடையுத்தரவை விதித்துள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் முதலாம் திகதி மன்றில் ஆஜராகுமாறு பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கினை இங்குருகம தோட்டத்தின் வி.ஜானகி, கே.தங்கராஜா, வி.கலைச்செல்வி, கே.விஜயலச்சுமி, வி, பூமாலை, எம்.குரசாமி, வி, கற்பூரணம், என். மதியாபரணம்,எஸ். நடேசன், எஸ்.பார்வதி ஆகியோர் தாக்கல் செய்திருந்தனர்

மனுவின் பிரதிவாதிகளாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர், பதுளை மாவட்ட அரசாங்க அதிபர்,நில அளவை திணைக்கள ஆணையாளர், பலாங்கொட பெருந்தோட்ட நிறுவன முகாமையாளர்,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை மலையகத்தின் 200 வருட வரலாற்றில் தோட்டத் தொழிலாளர்கள் காணி சுவீகரிப்பை எதிர்த்து இடைக்காலத் தடையுத்தரவை பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகுமென மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்தக்குமார் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மலையக மக்கள் தமது இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஏற்கனவே நடத்திய போராட்டத்தின் அர்ப்பணிப்புகளில் குறித்த மனுவை தாக்கல் செய்த இங்குருகம தோட்ட தொழிலாளர்களும் சேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விபரம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிரந்தர நியமனம் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பெயர் கல்வி வலய ரீதியாகத் தரப்படுகின்றது.

**கிளிநொச்சி**

உமாநந்தினி ரத்னம். பரந்தன்,கலைச்செல்வி ராசு பரந்தன்,சுவர்ணலதா ஜெயகாந்தன். வட்டககச்சி, பரமநாதன் கஜேந்திரன். இராமநாதபுரம், வரதராஜா முரளிதரன். கிளிநொச்சி, சிவசுப்பிரமணியம் 'ஞானகரன் வட்டக்கச்சி, கவிதா ஜெயக்குமார், கிளிநொச்சி, தம்பிப்பிள்ளை உதயமூர்த்தி கிளிநொச்சி, சுனிதா மாணிக்கம் கிளிநொச்சி, கைலைநாதன் சரவணன் பிரமந்தனாறு, தமிழ்ச் செல்வி ரத்னம் 20 குமாரபுரம், ஞானமலர் மகாலிங்கம் செல்வாநகர், தமிழ்ச்செல்வி ராசு கொரக்கன்காடு, தியாகராஜா சுஜிதா 212/2-முரசுமோட்டை, ஜெயகௌரி சுப்ரமணியம் கிளி/தர்மபுரம், மதினி அப்புத்துரை கிளிநொச்சி, தர்ஷினி சதாசிவம் உருத்திரபுரம், கந்தையா விஜிதா குருமன்காடு வவுனியா,

**முல்லைத்தீவு**

அருந்ததி பீரிடோ புதுக்குடியிருப்பு, பி.ரூபிணி விசுவமடு, ஜி.அமலதாஸன் இரணைப்பாலை, அன்ரனிப்பிள்ளை பாத்திமாராணி குமுழமுனை, தங்கராஜா அமிர்தநாயகி முல்லைத் தீவு, ரி.ஸ்ரீநந்தினி விசுவமடு, அகிலா பசுபதி வள்ளிபுனம்,

**துணுக்காய்**

வைகுந்தநாதன் முகுந்தன் கட்டைப்புரை, யாழ்ப்பாணம், எஸ். சோமேஸ்வரன் துணுக்காய், வீரசிங்கம் சந்திரகாந்தன் புதுக்குடியிருப்பு.

**வடமராட்சி**

ஆர்.பிரபுசங்கர் கரவெட்டி, தபோதினி தங்கவேலாயுதம் வல்வெட்டித்துறை, எம்.அமிர்தலிங்கம் கரவெட்டி, மதிவதனி சிவதாஸன் பருத்தித்துறை, அமிர்தலிங்கம் ஞானப்பழம் வல்வெட்டித்துறை.

**மன்னார்**

பிரீடா ஜொய்சி செபஸ்தியாம்பிள்ளை நானாட்டான், எஸ்.ஐ.என்ல்ம்பெரட் வங்காலை, ஏ. ரோசமலர் மொரய்ஸ் வங்காலை, அலெக்ஸ் றோச் நானாட்டான், பி.ஜோன்ஸன் பெலிக்ஸ் மன்னார், எப்.எம் மெக்லி பெரேரா பேசாலை, பி.ஜே ஷாமினி உயிலங்குளம், கெய்ஸர் றேமண்ட் டயஸ் பேசலை, சி.ஜே.அருள்நாயகம் நானாட்டான், டி.பி. இருதயநாதன் மன்னார், அருட்சகோதரி மேரி சயந்தி முருங்கன், ஏ.ஜெயமலர் ஞானப்பு உயிலங்குளம்.

**வவுனியா தெற்கு**

செல்வராஜா ரஜினி வவுனியா, ரே.ஜே. கருணாகரன் வவுனியா, என்.நிஸாந்தி வவுனியா, வி.வினோதினி மூன்றுமுறிப்பு, ஈ.எம்.ஏ. ஜெயராணி வவுனியா, ஆர். இளையதம்பி பூந்தோட்டம், விஜிதா கந்தையா வ/பேயாடிக்கூளங்குளம், எம். பிரதீபன் வ/ஸ்ரீநாகராஜா வித்தியாலயம். (25)

## ஏ-9..

அண்மையில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து முழங்காவில் நோக்கி உந்துருளியில் பயணித்த செல்வராசா-தினேஸ் (வயது-21 முழங்காவில்), விஜயரட்னம்-கேதீஸ்வரன் (வயது-20 தேறாங்கண்டல், துணுக்காய்), சந்திரகுமார்-இன்பராஜ்(வயது-17 முழங்காவில் ம.வி) ஆகிய மூவரும் போக்குவரத்து நடைமுறைகளுக்கு மதிப்பளிக்காது ஒரே உந்துருளியில் பயணித்துக்கொண்டிருந்தனர். இவர்களின் எதிர்த்திசையில் டிப்போ சந்தி நோக்கி பயணிகள் இன்றி வந்து கொண்டிருந்த சிற்றூர்திக்கு வழி விட்டுக்கொடுத்த சமயம் அந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

இதன்போது உந்துருளியில் பயணித்த வி. கேதீஸ்வரன் என்பவர் கால்முறிந்த நிலையிலும், ஏனைய இருவரும் தலை முறிந்து கைகால் பகுதியில் காயமடைந்த நிலையிலும் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துப்பற்றிய மேலதிக விசாரணைகளை தமிழீழக்காவல[illegible] றையின[illegible] மேற்கொண்டு வருகின்றன[illegible]. (லோ.தீ)

## வேம்படிச்..

படும் இக் காவலரன் சம்பந்தமாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையெடுக்காமையை யிட்டும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள். (41)

## திருமலை..

நிலையை கொண்டு வரமுடியும்.

தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் இந்த பிரதேசத்தில் சிங்களப் படையினர் அதிகமாக இருப்பதும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார். திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை நீக்க அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கல்முனையில்..

உதவிகள் பற்றி உரையாட வந்ததாகக் கூறிய இருவர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகவும் இக்கொலை தொடர்பான விசாரணை மேற்கொண்டு வரும் கல்முனைப் பொலிசார் கூறியுள்ளனர்.

## சனாதிபதி..

களுக்கு உலக சனநாயகவாதிகளின் சங்கம் தமது ஆதரவைக் தருவதாகக் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சனநாயகவாதிகளின் சங்கக் கூட்டத்தில் சுமார் 26 நாடுகளின் கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

இ[illegible] நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜோன் பீற்றர்சன், அமெரிக்க குடியரசுக்கட்சியின் தலைவர் கென் மெக்மன், பிரித்தானியாவின் கன்சவேட்டிவ் கட்சித் தலைவர் லியாம் பொக்ஸ் ஆகியோரும் அடங்குவர்.

இதேவேளை உலக சனநாயகவாதிகள் சங்கத்தின் இணைச் சங்கமான ஆசிய பசுபிக் நாடுகளின் சனநாயகவாதிகளின் சங்கத் தலைவராக தெரிவான எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏனைய நாட்டுத் தலைவர்களுடன் இணைந்து அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுடனான சந்திப்பிலும் பங்கேற்றார். (32)

## புலிகளின்..

மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட தலைவர் ஜொனியிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக ஜொனி படை உயரதிகாரிகளுடன் கலந்துரையாடி ஞானத்தின் கோரிக்கையை நிறைவேற்றுமாறும், தவறும் பட்சத்தில் விபரீதமான விளைவுகள் ஏற்படும் எனவும் விளக்கிக் கூறினார்.

இதனை அடுத்து படையினர் அச் சோதனை நிலையத்தை இரவோடு இரவாக அகற்றி உள்ளனர். (10)

## 203 பகுதி..

பகுதி நேர ஆங்கில ஆசிரியராகச் சேவையாற்றுவதற்கு அனுமதிக் கப்பட்ட கடிதத்தையும் விண்ணப் பதாரர் கொண்டு வரவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

(27.2001) பொது நிர்வாகச் சுற்று நிருபத்திற்கு அமைய 01.10.2001 இலிருந்து தொடர்ச்சியாக 180 நாட்கள் பூர்த்தி செய்தவர்களுக்கு 1.10.2001 திகதியன்று பெற்றிருந்த அடிப்படைத் தகைமையுடன் பகுதி நேர ஆங்கில பாடத்தைக் கற்பித்த வர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது. அடிப்படைக் கல்வித் தகைமைகளாக க.பொ.த உயர்தரத்தில் ஒரே தடவையில் குறைந்தது 03 பாடங்களில் சித்தி பெற்றிருக்கவேண்டும் என்றும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் 1.10.2001 இக்கு முன்பு (2000 ஆம் ஆண்டு பரீட்சையில்) ஆங்கில பாடத்தில் சி.அல்லது டி சித்தி பெற்றிருக்க வேண்டும் என்றும் நிர்ணயிக் கப்பட்டுள்ளது. அத்துடன் 1.10.2001 அன்று 45 வயதுக்குக் மேற்படாத வராகவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பெயர் விபரங்கள் சில 11- ஆம் பக்கத்தில்)

## ஹொக்லண்ட்..

தினம் மாலையே அரச சமாதானச் செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபாலவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது விடுதலைப்புலிகளின் பாதுகாப்பான போக்குவரத்துப் பிரச்சினை மற்றும் இது தொடர்பான விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தே ஜயந்ததனபாலவுடன் கலந்துரையாடியதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை அரசபிரதிநிதிகளுடனான நேற்றைய சந்திப்பின்போது தற்போது எழுந்துள்ள நெருக்கடிகள் குறித்து விரிவாகக் கலந்துரையாட முடியவில்லை என்பதால் அரச சமாதானச் செயலகத்துடன் மேலும் ஒரு சந்திப்பை எதிர்வரும் வெள்ளிக் கிழமை மேற்கொள்ள உள்ளதாகவும், விடுதலைப்புலிகளின் பாதுகாப்பான பிரயாணம் தொடர்பான முறுகல் நிலைக்கு இதுவரை தீர்வெதுவும் எட்டப்படவில்லையெனவும், இந்தப் பிரச்சினையில் நாங்கள் முழுமையான கவனம் செலுத்தி வருவதாகவும், இதற்கு விரைவில் ஒரு தீர்வு காணப்பட்டாக வேண்டும் வேறு வழியில்லை எனவும், தங்களுக்கு அந்த நம்பிக்கை இன்னமும் உண்டெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆனால் அரச தரப்பில் இருந்து இந்தச் சந்திப்புக்குறித்து எந்தக் கருத்துக்களும் நேற்று வெளியிடப்படவில்லை. (32)

## புலிகளுடனான..

மணிவரை நீடித்தது. எனினும் பேச்சுக்களின் நிறைவில் இலங்கை யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப்ஹொக்லண்ட் மற்றும் கொழும்பிலுள்ள நோர்வே தூதரக இரண்டாவது அதிகாரி உட்பட எவரும் பத்திரிகையாளர்களிடம் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

மேற்படி சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நோர்வே தரப்பில் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் கொக்லண்ட் மற்றும் கொழும்பு நோர்வே தூதரக இரண்டாவது அதிகாரி உட்பட நோர்வேக் குழுவினர் கலந்து கொண்டனர். (லோ,தீ)

## யுத்த...

களை உறுதியாகவும், ஆணித்தரமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

***நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டு உதவி வழங்கும் நாடுகளும் அதே நேரம் அமெரிக்கத் தூதரகமும் வன்முறைகளை நிறுத்தி சமாதானம் நோக்கிய பாதையில் செல்லுமாறு அரசையும் விடுதலைப்புலிகளையும் வலியுறுத்தியிருக்கிறது. இந்நிலையில் இன்றைய சந்திப்பு எப்படி இருந்தது. அவைபற்றி என்ன ஆராயப்பட்டது? முடிவுகள் ஏதும் எடுக்கப்பட்டதா?***

உண்மையில் சர்வதேச சமூகத்தின் கரிசனைகளை நாங்கள் மதிக்கிறோம். புரிந்து கொள்கிறோம். அதே போல் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வே தரப்பின் முயற்சிகளையும், ஈடுபாட்டையும் நாங்கள் மதிக்கிறோம்.

ஆனால் ஒருதரப்பென்ற ரீதியில் அரசும், படைத்தரப்பும் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையின் இப்போதுள்ள நிலையைச் சீர்செய்வதற்கு எந்த ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையில் இந்த முயற்சிகளோ, சர்வதேச சமூகத்தின் கரிசனைகளோ வெற்றியளிக்கும்போல் எங்களுக்குத் தெரியவில்லை. ஏனெனில் இன்றும் நாம் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். யுத்தநிறுத்த ' உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரத்தின் அடிப்படையில் 1.8 ஆவது சரத்தில் வலியுறுத் தப்பட்டிருக்கின்ற எங்கள் தாயகப் பரப்பில் செயற்படும் ஆயுதக்குழுக் களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் எங்கள் தாயகப் பிர தேசத்தை விட்டு வெளியேற்றப்பட வேண்டும் என்ற அடிப்படை விட யத்தை அரசோ அல்லது படைத் தரப்போ நடைமுறைப்படுத்தாவிடின் எமது தாயகப் பிரதேசத்தில் நடக் கின்ற கொலைகளுக்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்கமுடியாது.

எனவே இந்தக் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். போராளிகள் பாதுகாப்பாக நடமாடுகின்ற உரிமை முக்கியமாக அரசியல் பணியில் நிராயுதபாணியாக நின்று செயற்படும் போராளிகள் எந்த அச்சுறுத்தலுமின்றி பாதுகாப்பாக செயற்பட வேண்டும். இந்த விடயங்களை சீர்செய்யாது யுத்த நிறுத்த உடன்படிக்கையை அமுல் செய்வது சாத்தியமில்லாதது. அந்த நிலைக்குத்தான் போய்கொண்டிருக்கிறது என்பதை மிகத் தெளிவாக அவர்களிடம் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

ஆயுதக்குழுக்களை செயலிழக்கச் செய்வதும் அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் முடக்கப்படுவதும் அரசினுடையதும், படைத் தரப்பினுடையதும் கைகளில்தான் இருக்கிறது.

இராணுவத்தினுடைய துணையோடு இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதிகளுக்குள்தான் இவர்களது முழுநடவடிக்கைகளுமுள்ளது. இங்குதான் எங்கள் மக்களும் போராளிகளும் கொலை செய்யப்படுகிறார்கள். ஆகவே இது அரசுக்கும், படைத்தரப்புக்குமுள்ள முழுப் பொறுப்பு. யுத்தநிறுத்த சூழலைப் பேணவேண்டும். சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க வேண்டும் என்கின்ற அர்ப்பணிப்பு அவர்களிடம் இருக்குமாக இருந்தால் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணமுடியும்.

அதேசமயம் சர்வதேச சமூகத்தின் கரிசனைகளையும் நாங்கள் இன்று வெளிப்படுத்தியிருக்கிறோம். ஆகவே இதற்கான தீர்வைக் காணவேண்டிய பொறுப்பு அரசிடமும் படைத்தரப்பிடமும்தான் உள்ளது. எங்கள் கைகளில் இல்லை.

***இலங்கை அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையைப் போக்க நோர்வே அரசும் ஏனைய கொடையாளி நாடுகளும் முயன்று கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதன் தொடர்ச்சியாக நடைபெற்ற இன்றைய சந்திப்பில் ஏதாவது சிறிய முன்னேற்றமாவது ஏற்பட்டிருக்கிறதா?***

இந்தச் சந்திப்பில் எந்தவித முன்னேற்றமும் இல்லை மிகமுக்கியமாக இரண்டு விடயங்கள் அதில் மிகமிக முதன்மைப்படுத்தப்பட்ட விடயமாக யுத்தநிறுத்த சூழல் கேள்விக் குறியாகிற நிலைதான் மிகமுக்கியமான நிலைப்பாடாக இருக்கிறது. ஏனெனில் அனைத்து முன்னெடுப்புக்களுக்கும் அடிப்படையாக அமைவது இந்த யுத்தநிறுத்த சூழல். ஆகவே அமைதிச் சூழல் பேணப்பட வேண்டும். இது இன்று சீர்குலைக்கப்படுகின்ற சூழல்தான் இருக்கிறது.

நிராயுதபாணிகளாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நின்று அரசியல் பணிபுரிகின்ற போராளிகள் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்களது அரசியல் அலுவலகங்கள் தொடர்ந்து தாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக தென்தமிழீழத்தில் இந்த நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு இப்பொழுது இராணுவத்தின் முகாம்கள் மற்றும் நிலைகள் மத்தியில் ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

இதனை அந்தப் பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நாங்களும் கண்காணிப்புக்குழு ஊடாக அடிக்கடி முறையிட்டிருக்கிறோம். ஆனால் இவற்றுக்கெல்லாம் எந்தத் தீர்வும் வழங்கப்படாமல் இராணுவம் தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே இது உடனடியாக முடிவு கட்டப்பட வேண்டும். அந்தவகையில் இதற்கான ஆக்கபூர்மான நடவடிக்கைகளை அரசாங்கம் செய்யாத நிலையில் நோர்வே தரப்புக்கு இவை சம்பந்தமான ஆலோசனைகளையோ, கருத்துக்களையோ சொல்லாத நிலையில் தான் அவர்களிடம் இருந்து பெறாத நிலையில்தான் அவர்கள் இன்று வந்திருக்கிறார்கள்.

இந்தநிலையில் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணக்கூடிய ஆக்கபூர்வமான முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில்தான் அவர்களின் இன்றைய பயணம் நடைபெற்றிருந்தது.

***தேக்கநிலையை போக்குவதற்கு நோர்வே தரப்பினர் ஏதாவது யோசனைகளை முன்வைத்தார்களா?***

அவர்களுடைய ஆலோசனை இருதரப்பும் சந்தித்து பேச்சு நடத்துகின்ற சூழலை உருவாக்க வேண்டும் என்பதாக இருந்தது. ஆனால் அதற்குரிய சாத்தியப்பாடான சூழலைப் படைத்தரப்புக் குழப்பிய நிலையில் எம்மால் எதையும் செய்யமுடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளது. இந்த நிலையை அவர்களிடம் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

ஏனெனில் அங்கு போராளிகள் துன்புறுத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும், அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவதுமான நிலையை உருவாக்கிவிட்டு எங்கள் போராளிகளை சந்திக்கவைக்க முயல்வது என்பது சாத்தியப்பாடில்லாத விடயம்.

ஆகவே நாங்கள் இன்று எங்கள் தலைமைப்பீடத்தின் உறுதியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறோம். இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை இருதரப்பும் நன்கு ஆராய்ந்து ஒப்பமிட்டு இணக்கப்பாடு கண்ட உடன்படிக்கை. இந்த உடன்படிக்கையை முதலில் மதித்து நடக்க வேண்டும். இதனை ஒழுங்காக அமுல்படுத்துவதனூடாகத்தான் இருதரப்பு நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்பலாம்.

ஆகவே இந்த அடிப்படை விதியையே தகர்க்கின்ற வகையில் இந்த ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து எம்மீதும், எங்கள் மக்கள் மீதும் ஒரு நிழல் யுத்தத்தை திணித்துக்கொண்டு இப்படியான முயற்சிகளை நாங்கள் ஒழுங்கமைப்பது சாத்தியமில்லாத ஒன்று என்பதைத் தெளிவாக நோர்வே தரப்புக்கு வலியுறு[illegible]பிருக்கின்றோம்.

***நேரடிச்சந்திப்பு உடனடியாக சாத்தியமில்லை எ[illegible] செய்தியை அரசுக்கு அனுப்பியிருக்கிறீர்களா?***

நேரடியான சந்திப்பென்பது ஒரு நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் சூழலில் தான் சாத்தியமாகும்.

ஆகவே நல்லெண்ணத்தைக்கட்டி எழுப்பக்கூடிய சூழலை அரசும், படைத்தரப்பும் உடனடியாக செய்ய வேண்டும் என்பதைத்தான் அவர்களுக்கு சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

***போராளிகளின் போக்குவரத்து மற்றும் ஆயுதக்குழுக்கள் தொடர்பாக அரசாங்கம் புதிய யோசனைகள் எதையாவது முன்வைத்திருக்கிறதா?***

இன்று அவர்கள் அந்த யோசனையை அனுப்பவில்லை. அதாவது எங்களுடைய உறுதியான நிலைப்பாட்டை அறிந்து செல்கின்ற நோக்கோடு தான் நோர்வே தரப்பு வருகை தந்தது. ஆகவே அவர்களுக்கு எங்களின் உறுதியான நிலைப்பாட்டை முன்வைத்திருக்கிறோம்

***நோர்வே தரப்பு மீண்டும் வரக்கூடிய சாத்தியம் உண்டா?***

அது எங்களால் கருத்துச்சொல்ல முடியாது படைத்தரப்பும், இலங்கை அரசும் இதற்கு காட்டுகின்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் எதிர்காலத்தில் இப்படியான சாத்தியங்கள் உருவாகுமென நாம் நினைக்கின்றோம்.

***நல்லெண்ண சமிக்ஞைகள் ஏதாவது வரும் என்று எதிர்பார்க்கிறீர்களா?***

அதை நான் இப்போது கூற முடியாது இந்த அரசையோ, படைதரப்பையோ நம்பி நாங்கள் எந்த நம்பிக்கைகளையும் தெரிவிக்க முடியாது துரதிர்ஸ்ட வசமான நிலையில் இருக்கின்றோம். எனவும் அவர் தெரிவித்தார். (லோ.தீ)

## கருத்துப்படங்கள்

**வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப் படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக் கப்படும்.**

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிரதம ஆசிரியர்,**
**ஈழநாதம், கிளிநொச்சி.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.